வைத்திய சந்திரிகா
May 1926

JL
L:5m ௮1, N25VC
N26 1.52
21055

Registered No. M. 2084.

24 JUL 1930

31 OCT 1930

உ

# வைத்திய சந்திரிகா

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி தமிழ்மாதம் முதல் வாரத்தில் வெளிவரும்.

உள்நாடு சந்தா ரூ. 2. வெளி நாடு சந்தா ரூ. 3.

புத்தகம் 1 அக்ஷயஞு வைகாசிமீ பகுதி 12

விஷய சூசிகை.


| | | பக்கம். |
|---|---|---|
| பெரிய இடத்துப் பிதற்றல் | பத்திராதிபர் | ... 1 |
| இயற்கை உணவு :- | ஸ்ரீமான் ராமசுப்பிரமணியநாவலர் | ... 7 |
| மதிப்புரை. | | ... 11 |
| திவ்விய மூலிகைகள் :— | | ... 12 |
| விஷகடி சிகித்சை :— | ஸ்ரீமான் B. V. ராஜமாணிக்கம். | ... 15 |
| வைத்திய சாரம் :— | பண்டிட் நாராயண ஐயங்கார் | ... 140 |


Pandit, S. NARAYANA IYENGAR,
**Editor and Publisher.**

விலாசம் :— வைத்தியசந்திரிகா, கரூர்.

**Vol. 1 May 1926 No. 12**

Printed at the "Vivekabanu Press," Karur.

# பெரிய இடத்துப் பிதற்றல்.

"ழ" எழுத்து வேண்டுமோம்.

நமது டாக்டர் J. W. D. Megaw. C. I. E. B. A. M. B. அவர்கள் சுதேச வைத்தியமுறைகளை தூஷிக்கும்பொழுது கொய்னா, சால்வர்சன், என்ற மருந்துகளை உதாஹரிக்கின்றனர். இந்தமருந்துகள் சுதேசமுறைகளில் உண்டோவென பெருமைப்படுகின்றனர். இதைக்கேழ்க்கும் பொழுது நமக்கு ஒரு பழைய கதை ஞாபகத்திற்குவருகின்றது. சில மாணவர்கள் பத்துவருஷகாலம் வடமொழி சாஸ்திரங்கள் பயின்றுவந்தனர். ஒரு கபடமற்ற கிழவர் அவர்கள் படிப்பதை கவனித்துவந்தார். ஆனால் அக்கிழவருக்கு படிப்புவாசனை கிடையாது. தமிழ் எழுத்துகள் மாத்திரம் தெரியும். அவர் ஒருசமயத்தில் அம்மாணவர்களை அணுகி "குழந்தைகளே நீங்கள் வெகுகாலமாக படிக்கின்றீர்களே, எவ்வளவு படித்திருக்கிறீர்கள்" என்று கேட்டார். மாணவர்கள் அவரைப்பார்த்து "ஐயா நாங்கள் வியாகரணம் தர்க்கம் என்ற சாஸ்திரம் இரண்டையும் முடித்திருக்கிறோம். வேதாந்தம் இப்பொழுது ஆரம்பித்திருக்கிறோம்" என்றார்கள். அதைக்கேட்ட கிழவர் அப்படியா, இரண்டு சாஸ்திரங்கள் முடிந்துவிட்டதா. ரொம்பசந்தோஷம். உங்களை பரீக்ஷித்துப்பார்க்கின்றேன். எங்கே "ழ" எழுதுங்கள் என்றுசொன்னார். அதாவது தனக்குத் தெரிந்த எழுத்துகளில் கடினமான எழுத்தாக அவர் நினைத்ததை எழுதச்சொன்னார். அதைக்கேட்டமாணவர்கள் பரிகாசத்திற்காக "பெரியோரே, அந்த எழுத்து எங்களுக்குத் தெரியவில்லையே". என்றார்கள். அதைக்கேட்ட பெரியவர் "ஓகோ, பத்துவருஷம் படித்தும் இன்னும் "ழ" எழுத்துவரையில்கூட உங்கள் பாடம் நடக்கவில்லை போலிருக்கிறது. இவ்வளவு தானா நீங்கள் படிக்கும் அழகு. எங்கள் பால்யத்தில் நாங்கள் வேகமாக படித்துவிட்டோம். படிக்க ஆரம்பித்த முதல் வருஷத்திலேயே எங்களுக்கு "ழ" எழுத்து வந்துவிட்டது." என்று கடகடவென்று நகைத்தார். அதைப்போல நமது டாக்டர் சுதேசவைத்தியர்களை "ழ" எழுத்து பரீக்ஷிக்கின்றார். சிங்கோனா ஐரோப்பாவில் உத்பத்தியாகும் ஓர் மரம். அதிலிருந்து கொய்னா சேகரிக்கப்படுகின்றது. இந்தியாவில் உத்பத்தியான மூலிகைகளில் அபூர்வமாக நமது டாக்டர் கோஷ்டியினர் கண்டுபிடித்துவிட்டது ஒன்றுமில்லை. இந்தியா நீங்கலாக மற்றதேசம் முழுவதும் அதாவது

ஜர்மனி, பிரான்ஸ், அமெரிக்காமுதலிய தேசத்தினர் எல்லாரும் இடை
விடாது ஆராய்ச்சி செய்து நாளதுவரை கண்டுபிடித்த மருந்துகளின்
யோக்கியதையும் சுதேசமருந்துகளின் யோக்கியதையும் தகுந்தவித
மாக பரீக்ஷித்துப்பார்த்தாலன்றி தாரதம்யம் விளங்காது. இவர் போற்
றும் மருந்துகள்கூட இவர் தேசத்தினரால் கண்டுபிடிக்கப் பட்டுவிட்
டதாகச் சொல்ல முடியாது. மருந்துகளுக்கு வேறுதேசங்களை நம்பி
யிருந்ததால் மகாயுத்தத்தின் சமயத்தில் பல தொல்லைகளுக்குள்ளாக
வேண்டியிருந்ததென்றும் இனி அவ்விதமின்றி தங்கள் தேசத்திலே
யே மருந்துகளை தயார்செய்துகொள்ள வசதிகளை யுண்டாக்கிக்
கொள்ளவேண்டுமென்றும் அமெரிக்கப்பத்திரிகைகளில் சில வியாச
ங்கள் வெளிவந்தன. உலகம் முழுவதும் ஒன்றுசேர்ந்து நவீந ஆராய்
ச்சியால் கண்டுபிடித்த விஷயங்கள் எந்த அம்சத்தில் சுதேசமுறை
களைவிட உயர்ந்தது என்பது கடவுளுக்குத்தான் தெரியும். உலகத்
தில் பெரும்பான்மையான வியாதிகள் ஜீர்ணக்குறைவாலேயே உண்
டாகின்றன. இதில் பெரும் பான்மையான பலபேதங்களை Dyspep-
sia (டிஸ்பெப்ஷியா) என்ற பெயரால் அழைக்கின்றனர். இவ்வியா
திக்கு ஆங்கிலவைத்தியத்தில் மிகவும் கையாளப்படும்பிரதான ஔஷ
தங்களாவன —Pepsin, Pancreatin, taka diastase, papain,
ஆகிய இவைகளே. இந்த நான்கு மருந்துகளை தனித்தனியாகவும்
அல்லது சேர்த்தும் உபயோகிக்கின்றனர். இவற்றுள் papain (பேபே
யின்) என்பது சீமைசரக்கல்ல. நமதுநாட்டில் பப்பாளி மரம் என்று
சொல்லப்படும்ஓர் மரத்தின் ரசத்திலிருந்து தயாரிக்கப்படும்மருந்து.
இதற்கு ஜீர்ண சக்தியை விருத்திசெய்யும் குணமுண்டு. ஆனால் அக்
குணம் மிக இலேசானது. இந்த குணம் ஆங்கில வைத்தியத்தில் போ
ற்றப்பட்டாலும் சுதேசவைத்தியர்களுக்கு இதில் லக்ஷியம் தோன்
றாது. Pepsin (பெப்சின்) என்ற மருந்தை கவனிப்போம். இது பன்றி,
ஆடு, இவைகளின் இரைப்பையிலிருக்கிற சீதள உள் ஜவ்விலிருந்து
எடுக்கப்படும் பதார்த்தம். இம்மருந்தை ஆங்கிலவைத்தியர்கள் பிரமா
தமாகப் போற்றுவார்கள். இதின் குணமும் மிக மிதமானது. இம்மரு
ந்தால் இந்துக்களின் ஜாதி கெடுகின்றதேயன்றி பிரமாதமானகுணம்
ஒன்றும் கிடையாது. இம்மருந்தைப்பற்றி அவர்கள் சொல்வதா
வது—Pepsin is obtained from the stomach of the recently
Killed pig or calf. பன்றிகள், கன்றுகள், இவைகளைக்கொன்று
அந்தக்ஷணத்திலேயே அவைகளின் இரைப்பையிலிருந்து எடுக்கப்ப
டும் பதார்த்தம் பெப்சின் என்பது. pancreatin (பென்க்ரீடின்) என்
கிற மருந்தும் இதைப்போலவே Pancreas என்ற ஓர் உள் உறுப்பி
(அக்னியாசயம் ஓர் பித்தாசயம்) லிருந்து எடுக்கப்படும் பதார்த்தம். இந்த

2/10/55



சாமானும் பன்றி முதலியவைகளிலிருந்தே சேகரிக்கப்படுகின்றது.
இவ்விதமே மற்றவைகளும் பிரமாதமாக போற்றப்பட்டாலும்கூட
சுதேசவைத்தியர்களை மயக்கக்கூடிய குணங்கள் இவைகளில் ஒன்று
மில்லை. இவைகள் எல்லாவற்றையும் தனித்தனியாக உபயோகித்தா
லும் அல்லது சேர்த்து உபயோகித்தாலும் உண்டாகும் குணத்தைக்
காட்டிலும் எவ்வளவோ மடங்கு அதிக குணமுள்ள பலமருந்துகள்
சுதேச நூல்களில் பார்க்கலாம். உதாஹரணமாக (வைத்தியசாரம்
139-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கும்) சங்கவடையைவிட இவை
கள் குணத்தில் உயர்ந்தவையல்ல. முன்சொல்லிய ஆங்கிலமருந்துக
ளால்தீராத நோய்கள் இந்தமருந்தாலும் இதைப்போன்றவைகளாலும்
நிவர்த்தியாகியிருக்கின்றன. Typhoid என்ற ஸந்ததசுரம் நமது தேச
த்தில் மிகவும் பரவிவருகின்றது. இந்தவியாதியில் அனுபவமில்லாத
வர் யாருமிலர். நவீந ஆராய்ச்சி பெற்றவர்களாகிய நமது ஆங்கில
வைத்திய சகோதரர்கள் இவ்வியாதியில் chlorine mixture என்ற
மருந்தை உபயோகிக்கின்றனர். இம்மருந்தை மிகவும் பாராட்டுகின்ற
னர். இதன் தத்துவத்தை கவனிப்போம் பொடாஷியம் க்ளோரேட்
என்ற உப்பை முப்பது கிரேயின்சு போட்டு அதில் ஹைட்ரோக்
ளோரிக் ஆசிட் முப்பது துளிவிட்டால் பசும்மஞ்சளான நிறத்துடன்
ஓர் ஆவி உண்டாகும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக ஜலத்தை விட்டு
குலுக்கிக்கொண்டே இவ்விதமாக பனிரெண்டு அவுன்சு தண்ணீர்
விடவேண்டும். உடனே சீசாவில் வைத்துக்கொண்டு அவுன்சுகிளா
சில் கொட்டி கொடுக்கவேண்டியதே. இதைத்தான் மிகவும்
போற்றுகிறார்கள் இம்மருந்தில் சேரும் இரண்டு சாமான்களும் சா
மான்யமானதே. சுண்ணாம்புத்தண்ணீரில் குளோரீன் என்னும் வாயு
வைப் பாய்ச்சி பொடாஷியம்க்ளோரேட்செய்யப்படுகின்றது. ஹைட்
ரோக்ளோரிக் ஆஸிட் என்பது லவணதிராவகம். இதைப்பற்றி ஓர்
நிபுணர் கூறியுள்ள அபிப்பிராயமாவது. "I have had the bitter
experience of observing bronchitis in most of my cases
where this mixture has been tried. Nascent chlorine gas
irritates the respiratory tract during the act of deglutition
and has been the prolific source of bronchitis." "நான் பல
டைபாயிட் வியாதிகளில் இந்த குளோரைன் மிக்சரை உபயோகித்தி
ருக்கிறேன். இம்மருந்தை உபயோகித்த கேசுகளில் பல
வற்றில் ஓர் சாதி இருமல் உண்டாவதை அனுபவத்தில் பார்த்து
வெறுப்புகூட உண்டாகிவிட்டது. இம்மருந்தில் இருக்கும் குளோரி
ன்வாயு இம்மருந்தை விழுங்கும் பொழுது சுவாசநாடிகளைத் தாக்கு
கின்றது. உடனே ஓர் ஜாதி இருமலை உண்டுபண்ண மகத்தான காரண

மாகின்றது.” இம்மருந்தைவிட மிகுந்த குணமுள்ள பலமருந்துகள் நமது நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. (வைத்தியசாரத்தில் ஸந்ததசுரபிரகரணத்தில்காண்க) இவ்விதமே ஒவ்வொரு வியாதிகளிலும் ஆங்கில மருந்துகளுக்கும் நமது மருந்துகளுக்குமுள்ள தாரதம்யத்தை காட்டக்கூடுமாகிலும் விரிவுபற்றி நிறுத்துகிறோம். மற்றமருந்துகள் சுதேசமுறையில் விசேஷித்திருந்தாலும் குவைனாவுக்கு சமானமானமருந்து கிடையாதேயென சிலர் நினைக்கக்கூடும். ஆகையால் அதைப்பற்றி கவனிப்போம். கொய்னாவைப்பற்றி ஓர் நிபுணர் கூறுவதாவது— “The highly applauded quinine fails when the parasites become Quinine-proof. Scientific medicine is still lamentably in the dark as to explain satisfactorily the effects of Quinine itself on the human system known as Quininism in its multifarious aspects. The truthd iscovered under the name of scientific medicine is so variable that the truth of today is rejected as false the nextday.” “மலேரியா காய்ச்சல் ஓர்வித கிருமிகளால் உண்டாகின்றது. அவ்வியாதியில் கொய்னாவை உபயோகித்தால் அது சரீரத்தில்பரவி கிருமிகளை கொன்றுவிடுகின்றது. கிருமிகள் போய்விடுவதால் மலேரியாகாய்ச்சலும் தணிந்துவிடுகின்றது. ஆனால் விடாமல் சிலகாலம் கொய்னாவை உபயோகித்தால் வாடிக்கைப்பட்டு மருந்து ஒத்துப்போய்விடுகின்றது. அப்பொழுது தேவாமிருதமென போற்றப்படும் கொய்னா அக்கிருமிகளைக் கொல்ல சக்தியற்றதாகிவிடுகின்றது. கொய்னாவை நாள்பட உபயோகித்தால் சரீரத்தில் பலவித துர்குணங்கள் உண்டாகின்றன. அதற்கு குவைனினிசம் எனப்பெயர். இவைகளுக்கு காரணம் என்ன? என்பதை திருப்திகரமாக விளக்கமுடியாமல் நவீந சாஸ்திர ஆராய்ச்சி தத்தளித்துக்கொண்டிருக்கின்றது. நவீந சாஸ்திரீய வைத்தியம் என்ற பெயருடன் இன்று ஒன்று வெளிவருவதும் மறுநாளே அது சரியல்லவென்று தள்ளப்படுவதும் ஆக இவ்விதமாகவே ஒரே வஸ்து இன்று உண்மையென்று கையாளப்பட்டும் மறுநாள் அதுவே குப்பையென்று தள்ளப்பட்டும் வருகின்றது.” மலேரியாவியாதியில் நூற்றுக்கணக்காக குவினைன் இஞ்ஜக்ஷன் கொடுத்தும் பலனில்லாமல்போன பல நோயாளிகளைப் பார்த்திருக்கின்றோம். மற்ற ஆங்கிலமருந்துகளை சாமான்ய ஜனங்கள் கையாளுவது குற்றமாக பாவிக்கப்பட்டபோதிலும் குவைனாவுக்கு அந்த விதியில்லையாதலால் இதை பலரும் தபாலாபீசுகளிலேயே வாங்கியுபயோகிக்கக்கூடும். சிலருக்கு இதை உபயோகித்தவுடன் கடுமையான விக்கல் வியாதி கண்டிருக்கின்றது. முறைக்காய்ச்சலும் தணிந்தபாடில்லை. நிச்சயமாக



ச்கல மலேரியாகாய்ச்சலை விலக்காததும் விக்கல் முதலிய துர்குணங்களையுண்டுபண்ணுவதுமான ஓர் மருந்தை தாங்கள் சாஸ்திரீய ஆராய்ச்சியால் கண்டுபிடித்த தேவாமிருதமென நமது டாக்டர் அவர்கள் பெருமைப்படுவது நகைப்பாகவேயிருக்கின்றது. நாராயணஜ்வராங்குசம் முதலிய வெள்ளைப்பாஷாணம் கலந்த மருந்துகள் ஒரு துர்குணமுமின்றி வியாதியை நிவர்த்திசெய்வதை அனுபவத்தில் காணலாம். இதில் குவைனாவில் போல துர்குணம் ஒன்றும் தோன்றுவதில்லை. இம்மருந்தைப்பற்றி டாக்டர் கோமன் அவர்கள் கூறுவதாவது— “Thes pills were largely used in the out-patients (59 cases) and were found to be useful in checking the attacks of malarial fever.” “நாராயணஜ்வராங்குசமாத்திரைகளை ஏராளமாக உபயோகித்தோம். 59 நோயாளிகளுக்குக் கொடுத்துப் பார்த்தோம். மலேரியா காய்ச்சலை தணிப்பதில் இவைகள் உபயோகமுள்ளவைகளாகக் காணப்பட்டன.” இதேமருந்தை தகுந்த அனுபானத்துடன் உபயோகித்திருந்தால் டாக்டர் கோமன் அவர்கள் பிரமிக்கத்தக்கவிதமாக குணம் தோன்றியிருக்கும்.

## தனக்கு ஒன்று பிறருக்கு ஒன்று.

நமது டாக்டர் அவர்கள் ஏதாவது ஒரு ஆங்கிலமருந்து தவறிவிட்டதற்காக தங்கள் சாஸ்திரத்தைத் தூஷிக்கக்கூடாதென்கிறார். இந்த நியாயத்தை சுதேசவைத்தியநூல்களுக்கும் சொல்லக்கூடாதா. ஒவ்வொரு முறையிலும் சில மருந்துகள் தவறக்கூடும். அதற்காக சாஸ்திரத்தின்பேரில் பழி சொல்லக்கூடாதென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆனால் நமது டாக்டர் அவர்கள் இந்த நியாயத்தை சுதேசநூல்களுக்குமாத்திரம் கூடாதென மறுக்கின்றார். சுதேச நூல்களில் ஒன்றும் இல்லையென்று சொல்லுவது கண்மூடித்தனம். இவ்வாதம் சரியல்லவென்று பலதடவைகளில் நிரூபித்திருக்கின்றோம். ஆங்கில வைத்தியத்தால் நிவர்த்தியாகாத பலவியாதிகளை சுதேசமுறைகளால் நிவர்த்தியாவதை பக்ஷபாதமற்றவர்கள் நன்கு அறிந்துகொள்ளக்கூடும். நமது டாக்டர் அவர்கள் மலேரியாவியாதி கொய்னாவால் நிவர்த்தியாகாமல் இந்தியாவில் வேரூன்றியிருப்பதற்கு காரணம் சொல்லப் புறப்பட்டுவிட்டார். இவர் காரணம் சொல்லப்புறப்பட்டது இவருக்கே ஆபத்தென்பதை உணரவில்லை. ஒவ்வொன்றுக்கும்காரணம் சொல்லபுறப்பட்டால் டாக்டர்பாடு திண்டாட்டத்தில்முடியும். டாக்டர் அவர்களே! பிரதி வருஷமும் டைபாயிட் வியாதி பரவுகின்றதே என்று ஒருவர் கேட்டால் காரணம்என்னவென்று சொல்லுவது. பிளேக் சூறையாடுகின்றதேயெனில் அப்பொழுது பதில்என்ன.

வசூரிவாட்டுகின்றதேயெனில் பதில் பேசவேமுடியாது. தாங்களும்
தங்கள் கோஷ்டியினரும் இந்தியாவில் எந்தவியாதியை உங்கள் ஆரா
ய்ச்சியால் தணித்துவிட்டீர்கள். எந்தவியாதி எங்கள்தேசத்தை விட்
டது. என்று கேட்டால் நமது டாக்டர் கைவிரலில் ஒருவிரல் மடக்க
முடியுமா? இதற்கெல்லாம் பதில் சொல்லக்கூடியது என்னவென்றால்
இன்னும் ஆராய்ச்சி முடியவில்லை யென்பதே. இவர்கள் ஆராய்ச்சி
முடிவதற்குள் இந்தியாவில் மனிதப்பூண்டே அற்றுப்போகும். இவர்
கள் கண்டுபிடிக்கப் போகும் மருந்து தேவர்களுக்குத்தான் உபயோக
மாகும். தவிர கொய்னாவால் எல்லாமலேரியா காய்ச்சலும் நிவர்த்தி
யாகிவிடுவதாக நமது டாக்டர் உறுதிகூற முடியுமா. எவ்வளவோ
ஆங்கிலவைத்தியர்களே மாதக்கணக்காக கொய்னாவை கொட்டி கொ
ட்டி சாப்பிட்டும் நிவர்த்தியாகாமல் தவித்துக்கொண்டிருப்பதற்கு
எவ்வளவு உதாஹரணம் வேண்டுமானாலும் நாம் நிரூபிக்க முடியும்.
இந்த அழகில் நமது டாக்டர் கொய்னாவுக்கு துதி பாடுகிறார். கொய்னா
மிகவும் கொஞ்சமாகவே கைவசமிருப்பதால் தேவைக்குப் போத
வில்லையென்றும் அதினால் மலேரியா விலகவில்லை யென்றும் நமது
டாக்டர் வாதிக்கிறார். மலேரியா நாட்டை விட்டகலாமலிருப்பதற்கு
இது தகுந்த காரணமென்பதை இவர் மனசாக்ஷி ஏற்றுக்கொள்ளுமா.
நமது டாக்டர் அவர்கள் தன் மார்பில் கைவைத்துப் பார்த்தால் தன்
மனசாக்ஷி இந்த காரணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை யென்பது விள
ங்கும். இவர் சொல்லும் காரணத்தையே ஒப்புக்கொள்வோம். இந்தி
யாவில் ஒரு ஜில்லா அல்லது ஒரு டவுனிலாவது இவர் மனம்போல்
கொய்னாவை வாரி இறைத்து இந்நோயை விலக்கி நமக்கு திருஷ்டா
ந்தம் காட்டக்கூடாதா? இதற்குகூட போதியவளவு மருந்து கைவச
மிராதென்று சொல்லுவதையாரும் ஒப்பமாட்டார்கள். இதேவிதமாக
சுதேசவைத்தியர்களையும் கேழ்க்கலாம். அதற்குபதில் என்னவெனில்
அவர்களுக்கு வேண்டிய வசதி இராததே. வியாதி அசாத்தியநிலைமை
க்கு வருமளவு நோயாளிகள் ஆங்கிலவைத்தியத்தை நாடுகிறார்கள்.
அசாத்திய நிலைமைக்கு வந்தபிறகுதான் சுதேசவைத்தியர்களை
அணுகுகின்றனர். இது ஒரு காரணம். சுதேசவைத்தியர்களுக்கு
பயிற்சிபெற தகுந்தவழியில்லாமலிருப்பது மற்றொருகாரணம். மற்றும்
சில காரணங்களிருந்தபோதிலும் இந்த இரண்டுமே பிரதான கார
ணங்களாகும். இந்த இரண்டு காரணங்களும் நிவர்த்தியாக்கப்பட்
டால் சுதேசவைத்தியத்தின் பெருமை பிரகாசிக்க வழியுண்டாகும்.
உலகத்தில் வியாதியேயில்லாமல் ஜனங்களை சிரஞ்சீவிகளாக்க சுதேச
வைத்தியர்களால் கூடுமென்று நாம் சொல்ல வரவில்லை. சுதேசமுறை
களால் மரணவிகிதம் குறையுமென்பதே நமது அபிப்பிராயம். சுதேச



முறைகளிலுள்ள உயர்ந்த மருந்துகளை உபயோகிக்க தங்கள் இனத்
தார்தான் பிறப்புரிமை பெற்றவர்களென நமது டாக்டர் கூறுகிறார்.
எல்லாவைத்தியர்களும் தங்களிடமுள்ள சாரமான மருந்துகளை இவ
ரிடம் ஒப்படைத்துவிட இவர் போலி பாத்தியத்தைக் கொண்டாடி
னாலும் அதை ஏற்றுக்கொள்ள மற்றவைத்தியர்கள் தயாராகவில்லை
யென்பதை தெரிவித்து கொள்ளுகிறோம். உபயோகமற்ற மருந்துகளை
அரசாங்கத்தார் ஜனங்களுக்கு வழங்கத்துணியமாட்டார்கள் என்று
டாக்டர் கூறுகிறார். உபயோகமற்ற மருந்துகளை வழங்கக்கூடாதென்
பதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். உபயோகமற்றமருந்துகள்
என்று எதைச்சொல்லலாமெனில் வியாதிகளை விலக்க சக்தியற்றவை
களையே. நிச்சயமாக வியாதிகளை விலக்கக்கூடிய எந்தமருந்தை நமது
டாக்டர் கையில் வைத்துக்கொண்டிருக்கிறார். சுதேசவைத்தியர்களு
க்கு அரசாங்கத்தார் பயிற்சியளிப்பதைப்பற்றி நமது டாக்டர் பரிகசி
க்கிறார். பயிற்சிகொடுக்கவேண்டுமென்பதற்கு காரணங்கள் பலவுள.
அவற்றுள் பிரதானமான ஒரு காரணத்தை மாத்திரம் இங்கு கூறு
வோம். வைத்தியர்களின் தாரதம்யத்தை ஜனங்கள் அறிந்து கொள்ள
வேண்டியது அவசியமாகின்றது. தாரதம்யம் தெரியாமல் வைத்தியர்
கள்வசம் சரீரத்தை நம்பி எப்படி ஒப்படைப்பது. பயிற்சிவேண்டு
மென்று கோருபவர்களின் பிரதான நோக்கம் இதுவே. சுதேசவைத்
தியர்களுக்கு பயிற்சி கொடுப்பதில் நமதுடாக்டர் அவர்களுக்கு இவ்
வளவு ஆத்திரமுண்டாக காரணம் என்ன? தக்காலம் பயிற்சிபெறா
மலேயே சுதேசவைத்தியர் தொழில்புரிகின்றனர். இவ்விதமே பயிற்சி
பெற்றபிறகும் தொழில் செய்யப்போகின்றனர். அரசாங்கத்தார் சுதே
சவைத்தியர்களுக்கு பயிற்சியளித்தல் என்ற வார்த்தையைக்கேட்ட
வுடன் நமது டாக்டர் நடுங்குவதற்கு உள்ளூரயாதோ ஒரு காரணம்
இருக்கவேண்டும். அதைநேயர்களே ஊகித்துக் கொள்ளுமாறு கேட்
டுக்கொள்ளுகிறோம். மற்றவைகளை அடுத்த சந்திரிகையில் கவனிப்
போம்.

## இயற்கை உணவு.

உலகத்திற்பிறந்த பிராணிகளெல்லாம் தாம் உயிரோடிருத்த
ற்கு ஏதேனும் உணவை அவாவுகின்றனவாகவே காணப்படுகின்றன:
மனிதரும் அதுபோலவே தத்தமக்குரிய உணவு முதலியவற்றை
அவாவுகின்றவராகவே இருக்கின்றார்கள். ஏனெனில், உலகில் உயி
ரோடிருத்தற்கு உணவு இன்றியமையாத தாதலின் நமது தாய்
தந்தையரும் உணவு அருந்தியே வாழ்ந்தார்கள். நாமும் அவ்வா

றே வாழ்கின்றோம். நமது பிற்காலத்தாரு மங்ஙனமே வாழ்வார்கள். நமக்கு இன்றியமையாதனவாகக் கருதப்படுகின்ற பலவற்றையும் நம்மால் ஒழிக்கக்கூடும். முதன் முதல் உறக்கத்தை எடுத்துக்கொள்வோம். உறக்கமின்றி ஒருவன் வெகுநாள் இருக்கக்கூடும். உறக்கமென்பது நமது உழைப்பினால் ஏற்படும் களைப்பை நீக்குவதாகமட்டும் இருக்கின்றது. என்றும் இடையறாது உழைத்துக் கொண்டிருக்கின்ற உறுப்புக்கட்கு ஆறுதல் அளித்தல் இன்றியமையாததேயாம். ஆயினும், ஊன்றிப்பழகினார்க்கு அவ்வாறுதலினின்றும் நெடுநாள் நீங்கி இருத்தலுமெளிதென்றே கூறுவோம். சிலர் நீங்காத உழைப்பினாலாகிய இளைப்பு நீங்குதற்பொருட்டு விளையாட்டமாடுகின்றார்கள். அதனால் இன்பமும் எழுச்சியுமுண்டாகின்றன. அதனையும் தவிர்த்திருத்தல் கூடுமான தொன்றேயாம். அங்ஙனமே மக்கட்கின்றியமையாதனவற்றுட் பலவற்றையுங் கைக்கொள்ளாதுவிடுதலும் எளிதேயாம். சிறு குழவிகளுங்கூடப் பழக்கப்படுவராயின், இன்றியமையாது வேண்டப்படுவன சிலவற்றினின்றும் நீங்கியிருத்தல் கூடும். ஆனால், உணவை நீங்கியிருத்தல் எளிதன்று. சிலர் ஏதேனும் மருந்தை உட்கொண்டு சிலநாள் உணவினின்றும் நீங்கியிருக்கின்றார்கள். சிலர் முயற்சியின் வன்மையானும் மனஉறுதியின் உதவியினாலும் சில பலநாள் உணவுகொள்ளாமலே இருக்கின்றார்கள். ஆயினும், சின்னாட்சென்றபின்னர் அவர்கள் தமது மருந்தையும், முயற்சியையும், மனஉறுதியையும் விட்டுவிட்டுக் கீழ்படிக்குவரவேண்டுவதுதான். மருந்தினால் பசியை யடக்கியிருப்பார்க்குப் பின்னர் மிகுகளைப்பேற்படுதல் கண்கூடு. மனஉறுதியினால் பசியைச்சின்னாள் வென்றார்க்கும் இறுதியில் மிகுந்த களைப்பேற்படுமென்பதில் ஐயமில்லை. முயற்சியினால் பசியை நீக்கி இருப்பாருடையயாக்கை நாளடைவில் சீரழிந்து வருவதைக் கண்கூடாகப் பார்க்கலாம். ஒருபோழ்தேனும் பசியை யடக்கியிருப்பதாயின் மயக்கமும் களைப்பும் உண்டாகத் தலைப்படுகின்றன. ஆதலால், உணவு இயற்கையாகவே இன்றியமையாததாமென்பது புலனாகின்றது. எம்முயற்சியானும் அதனை மாற்றல் கூடாமையேயாகும். "மானங்குலங்கல்வி வண்மையறிவுடைமை—தானந்தவமுயற்சி தாளாண்மை—தேனின்—கசிவந்த சொல்லியர் மேற்காமுறுதல் பத்தும்—பசிவந்திடப் பறந்து போம்" என்றனர் ஆன்றோர். இதனால் அனைத்தினும் இன்றியமையாது வேண்டப்படுவது உணவேயாமென்பது பெறப்பட்டது.

சிலர் இதனையும் மறுத்தல்கூடும். சிறு குழவியாயிருக்கும்போழ்தே தாய்தந்தையர் உணவளியாது பேணின் அவைகள் உணவின்றியே வாழும் வல்லமை யுடையனவாயிருத்தல் கூடுமெனச் சிலர் கூறலாம். அந்தோ? இஃதறியாமையினு மறியாமை. இவ்யாக்கைக்கே 'அன்னமயகோசம்' என மேலோர் பெயரிட்டனர். ஆதலின் இஃது அன்னத்தாலேயே வளரத்தக்கதாயிருக்கின்றது. அன்றியும், சிறுகுழவிகள் பிறந்த உடனேயே தாயின் பாலருந்துகின்றன. அப்போழ்து அவற்றிற்குப் பால்கொடாதுவிடின் அழத்தொடங்குகின்றன. அப்போழ்தும் உண்மைகண்டுபிடிக்கவேண்டி வாளாவிருப்பின் இறுதியில் அக்குழவிகள் இவ்வுலகத்தைவிட்டுமாய்வதே பலனாய் முடியும். தாயின் கருப்பையினுள்ளிருக்கும் போழ்தே உணவை வேண்டும் இச்சிறியபச்சிளங்குழவிகள் பூமியிற்றோன்றிய பின்னர் அதனை வேண்டாது எவ்வாறு தானிருக்கும்? "சண்டைப்பைக்குள்ளுயிர் தன்றாயருந்தத் தானருந்தும்" என்றும் "அன்னை வயிற்றிலருத்தி வளர்த்தவன்' என்றும் மேலோர்களாற் கூறப்பட்ட அடிகளை ஈண்டுக்கொணர்ந்துகாண்க. ஓராவின் கன்று தான்பிறந்த அந்நேரத்திலேயே தாய்ப்பாலுண்ணச் சேறலைக் காண்கின்றனமன்றோ? அன்றியும், உணவின்றியே யிருத்தல்கூடுமாயின் எத்துணைப்பேர் அதில் பழக்கமுற்றிருக்கமாட்டார்கள்.? இவ்வுலகத்துப்பொருட்கும் அவாவில்லாதகன்றிருக்குமே! கொலை, களவு, புலை முதலியனவும் சேய்மைக்கண்ணே சென்றொதுங்கியிருக்குமே! அனைத்துத் துன்பங்களும் உணவைக்கருதியன்றோ எழுகின்றன? அவைமுற்றும் காணப்படாவாயொழியுமன்றோ? ஆதலின், அங்ஙனமிருத்தல் ஒருபோதுமியலாதென்பதே துணிபாம். இதைநோக்கியே அருங்கவிப்புலமைவாய்ந்த ஒளவையாரும் "ஒருநாளுணவை ஒழியென்றாலொழியாய்—இருநாளைக் கேலென்றா லேலாய்—ஒருநாளும்—என்னோ வறியா யிடும்பைகூரென்வயிறே—உன்னோடு வாழ்தலரிது" என்றருளினார்.



நாம் கொள்ளுகின்ற உணவு பலவகையாகவிருக்கின்றது. ஆயினும் அவை இயற்கையுணவும் செயற்கையுணவும் என இருவகையாகப் பகுக்கப்படும். அவற்றுட் செயற்கையுணவு முற்றிலும் நீக்கத்தக்கதாயிருக்கின்றது. ஏனெனில், நமது யாக்கையானது இயற்கையானமைந்ததாகும். அங்ஙனம் இயற்கையானமைந்த யாக்கையைச் செயற்கையுணவால் வளர்த்தல் சற்றேனும் பொருத்தமின்றாம். அன்றியும் அதனால் விளையும் பயன்கள் நோயும் குறுகிய வாழ்நாளுமேயாம். தற்போதைய மனிதருட் பெரும்பாலாரும் நாற்பது ஐம்பதுக்குள் உயிர்நீங்குவதற்கும் முன்னையோர் நூறுமுதல் நூற்றைம்பதின் மேற்படவிருந்ததற்குங்காரணம் உணவேயாகும். இயற்கையுணவினால் நோயின்மையும் நீண்ட வாழ்நாளுமுளவாகின்றன. செயற்கை உணவு

யாக்கையின் உறுப்புக்களை இயல்பின் வேறுபடுத்தி இறுதிக்காலத்தை விரைவிலேயே கொணருந்தன்மைத்தாயிருக்கின்றது. செயற்கை உணவை உட்கொள்ளுபவர்களுடைய மனம் சீரிய நிலைமையில் இருப்பதில்லை. அவர்கள் மனத்தெளிவின்றியே இருக்கிறார்கள் .காலதேகத்திற்குஞ் சூட்சுமதேகத்திற்கும் மிகுந்த பற்றுண்டு. காலதேகம் இயற்கையினின்றும் மாறுபடும் போழ்து மனமும் சிறிது மாறுதலடைகின்றது. இயற்கையான யாக்கையினை யில்லாதவர்கள் முரட்டுத்தனமான செயல்களைச் செய்வதும் மிகுந்தகோபமுடையராயிருத்தலும் கண்கூடாய்க் கண்டனவே. ஆயினும், எல்லாருமத்தகையாரென எண்ணுதல் கூடாது. வேறுபல காரணங்களால் அவர்களுடைய மனம் சீர்மையடைந்திருத்தலுங்கூடும். செயற்கை உணவென்பது இயற்கைக்கு மாறுபட்டதென்பதுதானே புலனும். இயற்கைக்கு மாறுபட்ட உணவென்பது நமது யாக்கைக்கு எவ்வாற்றானு மொவ்வாததாகும். சிலவுணவுகள் தம்மைநோக்க இயற்கையானவையாகவே இருக்கலாம். ஆயினும், நமது யாக்கைக்கு இயற்கையாகப் பொருந்திய உணவுகளல்லவாதலின், அவையும் செயற்கையுணவுகளின்பால் வைத்தெண்ணத்தக்கன. அவையானமீன் இறைச்சி முதலியனவாம். இவைதம்மை நோக்க இயற்கையுணவு போலத்தோன்றுகின்றன. ஆயினும், அவை நமது யாக்கைக்குப் பொருந்துவன வல்ல. நமது யாக்கையோ ஊனால் ஆக்கப்பட்டது. அத்தகைய யாக்கைக்குப் பின்னும் ஊனைச்செலுத்தி வளர்த்தல் இயற்கைக்கு மாறுபாடன்றோ? "தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூனுண்பின் எங்ஙன மாளுமருள்" என்றனர் ஆன்றோர். இங்ஙனம் மாறுபட்ட உணவுகள் பலவுள்ளன. அவையெல்லாம் நமது யாக்கைக்குப் பொருந்துவன வாகா. மீன், இறைச்சிமுதலியன யாக்கைக்கு நோயைக் கொடுப்பதன்றிக் குறுகிய வாழ்நாளையுங் கொடுக்கின்றன. இதனை மறப்பார் மறுப்பினும் உண்மை உண்மையாகவே இருக்கும். யாக்கைக்கு வலிமையைக் கொடுக்குமென்று சிலர் இவற்றை யுண்கின்றார்கள். உண்மையாக அவைவலிமையைக் கொடுக்குமென்று நம்மால் ஏற்றுக்கொள்ளக்கூடவில்லை. அவைசெய்யு முதவியினும் துன்பங்கள் பன்மடங்காய்ப் பல்குகின்றன. சிலர் அவ்வுணவுகளின் தீமையை அறிந்தும் அவற்றை நீக்குதற்கு இயலாதாராயிருக்கின்றனர்.

இத்தகைய செயற்கை உணவுகள் குழவிப்பருவமுதற்கே யாக்கையிற் புகத்தொடங்கின வாயின், அதற்காக இரங்குவதன்றி நாம் என் செய்வது? அவர்களுடைய யாக்கையின் இயல்பைப் பற்றி நாம் கூறவேண்டுவதில்லை; சுருங்கக்கூறின் அவர்கள்தம் யாக்



கையானது நோய்க்களஞ்சியமாக விருக்கின்றது. சிரங்குகள், கட்டிகள் முதலியன அவர்களுடைய யாக்கையில் இயல்பாகவே தோன்றுகின்றன. இதை நம்தேசத்து மக்களிடம் தெளிவாய்க் காணலாம். செயற்கையுணவு தாமத குணத்தை விருத்திசெய்கின்றது. ஒவ்வொருவருடைய யாக்கையும் ஏழுவருஷத்திற்கு ஒருதடவை அவரவர்தம் உணவிற்கேற்றபடி மாறுதலடைகின்றது. ஏழுவருடம் செயற்கையுணவையே புசித்து வருபவனுடைய யாக்கையானது இறுதியில் அவ்வுணவின்மயமாகவே இலங்கும். குழவிப்பருவமுதற்கொண்டே இயற்கையுணவிலேயே பழகுதல்வேண்டும். அவ்வாறு பழகுவாது யாக்கையே நோயின்றியதாய் இருக்கும். அக்குழவிகளுடைய மனமானது தெளிவுபெறுகின்றது. கடவுட்பத்தியும் நல்லொழுக்கமும் அவர்களிடத்தே சிறந்து விளங்கும். தூயதன்மையராய் அவர்கள் வாழ்க்கை நடத்துவார்கள். அன்பும் இன்பும் எந்நாளும் அவர்களைவிட்டகலாவாகும். ஆயினும், ஏனைக்காரணங்களால் தம்மியல்பு மாறுபடுவாருமுளர். அவர்களெல்லாம்எளிதிற் சீர்திருத்தமடையத் தகுந்தவர்களேயாவர். இயற்கையுணவே மேன்மையுடைத்ததாகும். அதனை விரும்புதலே சான்றோர்தம் கடனும்.

(தொடரும்)

ராமசுப்பிரமணிய நாவலர்,
(பத்திரிகாசிரியர், 'விசாலஹிருதயம்.')

## மதிப்புரை.

ஆனந்தகுணபோதினி—இப்பெயர் பூண்ட மாதசஞ்சிகை ஒன்று வரப்பெற்றோம். பெயருக்கிணங்க இப்பத்திரிகை படிப்பவர்களுக்குப் பலவிதத்திலும் ஆனந்தத்தைப் பெருக்குமென்பதில் சற்றேனும் ஐயமில்லை. இதில் "ஆனந்ததரிசனம்" "பழமொழிக்குறிப்புகள்" "பிரபந்ததரிசனம்" முதலிய தலைப்புகளின் கீழ்காணப்படும் ஒவ்வொரு விஷயமும் மிகவும் அருமையானவை. இதற்கு வருஷ சந்தா ரூபாய் ஒன்றே.

விலாசம்— டி. இராஜகோபால முதலியார், புரொப்ரைட்டர், ஆனந்தகுணபோதினி ஆபீசு. 302 தங்கசாலைவீதி, சென்னை.

210155

ஸ்ரீ சாரதா—இது ஓர் வைத்தியபத்திரிகை. இது மைசூர் சமஸ்தானத்தைச்சேர்ந்த சிருங்கேரியிலிருந்து வடமொழி[illegible]

210155

ரமாகிறது. மாதம் இருமுறை வெளிவருகின்றது. வடமொழி வைத்தியத்தின் நுட்பங்களை வடமொழியில் அழகாக வெளியிடுகின்றது. இதற்கு வருஷசந்தா ரூபாய் 2-8-0.

விலாசம்—ஸ்ரீசாரதா-சிருங்கேரி, மைசூர்.

---

தொழிலாசிரியன், இது சிவகங்கையிலிருந்து வெளியாகும் மாதபத்திரிகை. ஸ்ரீமான். புரொபஸர், கே. எஸ். வைத்தியநாதன் அவர்கள் ஆசிரியராக இதை நடத்துகின்றார். தொழில்முறைகளை சுலபமாக அறிந்துகொள்ளும்படி பல அற்புதவிஷயங்கள் இதில் காணப்படுகின்றன. "புதிய யோசனைகள்" "செல்வம்தரும் சிறு கைத்தொழில் முறைகள்"; இது முதலியதலைப்புகளின் கீழ்காணப்படும்விஷயம் ஒவ்வொன்றும் மனதை கவரக்கூடியதே. வருஷசந்தா ரூபாய் 2.

விலாசம். மானேஜர். "தொழிலாசிரியன் ஆபீசு" சிவகங்கை, S. India.

---

## திவ்விய மூலிகைகள்.

தமிழில் சித்தர்நூல்களிலும் வடமொழி நூல்களிலும் பல அருமையான திவ்வியமூலிகைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸந்தானகரணி என்பது ஓர் மூலிகை. இது அறுப்புண்ட அவயவங்களை கூடும்படிசெய்யும். விசல்யகரணி என்று ஓர் மூலிகை. இதுசரீரத்தில் பாய்ந்துள்ள குண்டுகளையும் அம்புநுனிகளையும் அப்புறப்படுத்தும். இவ்விதமே சுசுருதஸம்ஹிதையில் பலமூலிகைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. பலகாரணங்களால் நமது புராதன நாகரீகம் மழுங்கினதுபோல இம்மூலிகைகளும் நாளடைவில் நமக்கு அருமையாகி விட்டன. நவீந நாகரீகத்தில் மூழ்கின சிலர் இந்த திவ்வியமூலிகைகளைப்படித்தவுடன் அசம்பாவிதமென தூற்றத்தலைப்பட்டுவிடுகின்றனர். பொய்யாக எழுதி வைத்தவிஷயங்களெனவும் சிலர் வாதிக்கின்றனர். நமது பெரியோர்கள் அனாவசியமாக மிகைப்படவோ அல்லது பொய்யாகவோ எழுதியிருக்கமுடியாதென்று பலதடவை நாம் சொல்லியிருக்கின்றோம். அபூர்வ மூலிகைகள் உண்டென்பது ஆங்கிலேயர்களாலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. சிலகாலத்திற்குமுன் பத்திரிகையில் வெளிவந்த அடியில் காணப்படும் வியாசமே சிறந்த அத்தாக்ஷியாகும்.



"தென் அமெரிக்காவில் இக்காலங்களில் வினாசுலா, குலம்பியா, என்று சொல்லப்பட்ட தேசங்களில் மிகுந்தவனங்கள் இருக்கின்றன. அத்தேசபூர்வவாசிகளுக்கு இந்தியர்கள் என்று பெயர். விமாதேசத்து வைத்திய பரிசீலன பத்திரிகையான "புல்லடீன் பார்மோகூடிகோ" என்ற பத்திரிகையின் வியாசத்தை மொழிபெயர்த்த "அமெரிக்கன் டிரக்கிஸ்ட்" என்ற பத்திரிகை பின்கண்ட தாவரவர்க்கத்தின் விசேஷங்களைக்கண்டு எழுதியிருக்கிறது. குலம்பியாதேச அரசாங்கத்தார் அத்தேசத்திலிருக்கும் வனமூலிகைகளைக் கண்டுபிடித்து அவைகளின் குணங்களை தங்களுக்கு அறிவிக்கும்படி டாக்டர் ஜெட்பேயான்என்ற தாவரசாஸ்திர நிபுணரையும் ஒரு ரசாயனசாஸ்திர நிபுணரையும் நியமித்தார்கள்.

இவர்கள் கோகிடாரீஜன் என்று சொல்லப்பட்ட வனங்களில்நெடுநாளாய் வசிக்கும் இந்தியர்கள்கையாண்டுவரும் ஔஷதாதிகளைப்பற்றியும் ஷை காடுகளில் உற்பத்தியாகும் பற்பல தாவரங்களின் விசேஷங்களைப்பற்றியும் அவைகளின் பதார்த்த குணவிசேஷங்களையும் விசாரித்து அறிந்துவா அக்காடுகளுக்கு சென்றார்கள். இவர்கள் அங்கு இருந்த இந்தியர்களுடன் சம்பாஷணை செய்து விசேஷ கௌரவமும் குணங்களும் பொருந்திய முக்கியமான இரண்டு புல்வர்க்கங்களை அநுபோகத்தாலும் பரீட்சையாலும் அவைகளின் குணங்களை இந்தியர்களிடம் கற்றுக்கொண்டார்கள். இவ்விரு செடிகளின்பெயர் ஒன்று யாகி, மற்றொன்று யாகு. இப்பெயர் அங்குள்ள இந்தியர்களின் தேசபாஷையில் வழங்கப்படுகிறதாம். யாகி என்ற புல் வர்க்கத்தைச் சேர்ந்த செடியின் விசேஷத்தைப்பற்றி டாக்டர் Z பேயன் பரீட்சை செய்து பின்வருமாறு அறிவித்திருக்கிறார்.

இந்தப்புல்லின் ரசம் சாப்பிட்டால் ஒருவித புதிய சக்தி தருகின்றது. இந்தசக்தி இக்காலத்தில் டெலிபதி யென்று சொல்லலாம். உட்கார்ந்த இடத்தில் இருந்துகொண்டே ஒருவன் பற்பல விஷயங்களை எவ்வளவுதூரம் இருந்தாலும் மனோநிலையில் அறிந்துக்கொள்ளலாம் ஒருஇடத்தில்நடக்கும் சம்பவங்களை நேரேபார்ப்பதுபோல் வருணித்துச் சொல்லலாம். டாக்டர் பேயன் தாம் அநேக பரீட்சைகள் செய்து ஆச்சரியப்பட்டுத் தாம் அனுபோகமடைந்தது மல்லாமல் மற்றொருவருக்கும் அவ்வனுபோகத்தைக்காட்டி அந்த யாகி யென்ற ஒஷதியின் சுபாவத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். ஒரு சமயம் ராணுவ வீரரான கஸ்டோடியா மோரேலஸ் என்பவரை

தாம் அழைத்து யாகி என்ற பச்சை ஔஷதியை பிழிந்து ரசமாக்கி அதில் 11 துளிகளைச் சாப்பிடும்படி செய்தார். இந்தமருந்து அருந்தின ராணுவவீரர் ஹாசாநதியின் சமீபத்தில் இருக்கிற ஸாய்கிடோ ராணுவஸ்தலத்தில் அப்போது இருந்தார். இவர் அச்சமயத்தில் முக்கிய தளகர்த்தர் வேலைபார்த்து வந்தனர். இம்மருந்து ரசம் சாப்பிட்ட மறுதினம் இத்தளகர்த்தர் டாக்டர் Z. பேயேனிடம் தாம் அதிக திகிலடைந்தவர் போல் ஓடிவந்து இபாக் என்ற இடத்தில் தம் தகப்பனார் இறந்துவிட்டதுபோல கண்டதாயும் தம்சகோதரி கொடிய நோயால் வருந்துவதாயும் இச்சம்பவங்களை தாம் இரவில் கண்டதாயும் அறிவித்தார். இச்சம்பவம் நடந்த ஒரு மாதத்திற்கெல்லாம் அத்தளகர்த்தருக்கு வந்த ஒரு கடிதத்தில் அவர்பிதா இறந்துவிட்டதாயும் அவர் சகோதரி மிகுந்த வியாதியால் பீடிக்கப்பட்டிருப்பதாயும் கண்டிருந்தது. இந்த ஆச்சரியத்தைக்கண்டு அந்த இராணுவ அதிகாரி மூலிகைகளின் விசேஷத்தைக் கொண்டாடிப் பல புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார். அடிக்கடி காட்டில் வசிக்கும் குடிஜனங்களான இந்தியர்கள் தம்மிடம் அவர்கள் தாங்கள் காட்டை விட்டு வெளியேபோய் ஒருநாளும் பார்த்திராத விசேஷங்களை அவர்கள் பார்த்ததுபோல் தம்மிடம் அறிவிக்கிறார்களென்று டாக்டர் பேயன் பலவிடங்களில் குறிப்பிட்டிருக்கிறார். நம்தேச கோபுரங்களையும் நகரங்களையும் வெள்ளைஜாதியர்களையும் தாங்கள் பிரமிக்கும்படியான மாதிரியாய் கண்டதாக அறிவித்திருக்கிறார்.

இனி யாகுயென்ற ஔஷதியைப்பற்றி எழுதுவோம். யாகு என்பதும் யாகி வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு தாவரப்புல்.

இதைக் குலம்பியா தேசத்து தேசவாசிகளான இந்தியர்கள் மேல்பட்டை நீவி உள்ளிருக்கும்சதை அம்சத்தை எடுத்து பொடி செய்து வைத்துக்கொள்ளுகிறார்கள். அதை அவ்விந்தியர்கள் தாங்கள் கடலில் தூரப்பிரயாணங்கள் செய்யும்போது நீரில் தோய்த்து உட்கொண்டால் பசி, தாகம், களை இவைகள் உண்டாவதில்லையாம். இந்த அபூர்வ செடியின் சக்திற்காக இதை வெகு ஜாக்கிரதையாய் பயிர்செய்து தங்கள் உயிர்போல காப்பாற்றி வருகிறார்கள் என்று மூலிகை பரீட்சகரான டாக்டர் பேயன் தெரிவிக்கிறார். இது அதிசூடான பாகத்தில் வசிக்கும் இந்தியர்களை மலேரியா என்ற விஷசுரத்தினின்றும் காப்பாற்றுவது மல்லாமல் எவ்வியாதியையும் அணுகவொட்டாமல் தடுக்கிறதாம். இதை உபயோகிக்காத வெள்ளை ஜாதியர் அந்தத்தேசத்தில் போன உடனே பல சுரங்களில் அவஸ்தை



ப்பட்டு மறித்துவிடுகிறார்களென்று சொல்லப்படுகிறது. இப்பேர்ப்பட்ட வன ஔஷதத்தை ஆங்கிலதேசத்தார் மெடிரியா மெடிகாவில் சேர்க்க உத்தேசித்திருப்பதாக வதந்தி. ஆகவே தெய்வ சிருஷ்டியின் வேடிக்கைகள் பலவற்றை மனிதன் அறிந்து கொள்ளாமலும் பெரிய நிபுண கிரந்த கர்த்தாக்களான நம் இந்து தேச மகரிஷிகளால் எழுதப்பட்டுள்ள பற்பல மூலிகைகளையும் அறியாமலும் பிற நாட்டார் கொடுக்கும் மருந்துகளையே அமிர்தம் என நம்பி ஜனங்கள் நம் ஆயுர்வேதமுறைகளைக் கையாளாமல் பல வியாதிகளுக்குட்பட்டு வருந்துவது விசனகரமாயிருக்கிறது.”

---

## விஷகடி சிகித்சை.

ஸ்ரீமான் B. V. ராஜமாலிக்கம் அவர்கள், காரியதரிசி, கோயமுத்தூர் ஜில்லா தேசிய வைத்தியசங்கம், எழுதுகிறார்.

(அடியில்கண்டவிஷயம் என் சொந்த அனுபவத்தினின்று தெரிந்துகொண்டது.)

உஷ்ணதேசத்தில் பலபிரதேசங்களில் தேள், பாம்பு, முதலிய விஷஜந்துக்கள் ஜனங்களை ஹிம்சிப்பது சகஜம். சிலதேசத்தில் மலைசார்புகள், காடுகள், நதிகள், இவைகளின் அருகில் உள்ள கிராமங்களில் விஷஜந்துக்களின் தொந்திரவு அதிகம். விஷகடிகளின் தாரதம்யங்களை ஒருவன் நன்கு தெரிந்து கொள்ளுவதற்கு வெகுகாலத்திய அனுபவம் அவசியமாகின்றது. உண்மையில் சிலரை சர்ப்பம் தீண்டுகின்றது. அவ்விதம் தீண்டியபோதிலும்கூட சிலசமயங்களில் விஷவேகம் காணாமல் இருக்கின்றது. சிலருக்கு ஊசிகுத்துவதுபோன்ற அல்பகடியாலும் மிகுந்த விஷவேகம் காணுகின்றது. சிலர் பாம்பை மிதித்தவுடன் தன்னைத்தீண்டிவிட்டதாக பயந்துகொள்ளுகின்றனர். அவர்களுக்கு உண்மையில் கடிவிஷம் இல்லாவிட்டாலும் விஷகடியால் உண்டாகும் வேதனைகள் முழுவதுமே காண்கின்றன. இதற்கு சங்காவிஷமென சுதேசநூல்கள் கூறுகின்றன. ஆகவே உண்மை விஷமும் சங்காவிஷமும் ஒரேமாதிரி குறிகளைக் காட்டுகின்ற பாம்புகளிலேயே சிலபாம்புகளுக்கு விஷமில்லையென்று சிலர் சொல்லுகின்றனர். விஷமுள்ள பாம்புகள்கூட அவைகள்வசிக்கும் ஸ்தானபேதத்தால் விஷமற்றவைகளாகவோ அல்லது அல்பவிஷமுள்ளவைகளாகவோ ஆகின்றன என்று சிலர் நினைக்கின்றனர். சிலபாம்புகள் ஒருதடவை கடித்து விஷத்தைக்கக்கிவிட்டபிறகு மறுபடியும் அதற்கு

விஷம் உண்டாக சிலமணிகள் பிடிக்கின்றது. அவ்விதம் விஷம் ஊறுவதற்குள் கடித்தால் விஷவேகம் உண்டாவதில்லையென்றும் சொல்லுகின்றனர். சிலபாம்புகளில் விஷம் வெகுவிரைவில் சரீரத்தில் வியாபிக்கின்றது. சிலவற்றின் விஷம் தாமதமாக சரீரத்தில் வியாபிக்கின்றது. இவைகளைப்பற்றி விவரித்தால் விரியும்.

பாம்புகடி இருவிதமானது. ஒன்று உண்மைகடி. மற்றொன்று பொய்கடி. அதாவது பாம்புகடித்துவிட்டதாக பீதியுறுதல் இதற்கு சங்காவிஷமெனமுன்பேசொன்னோம். இவ்விருவிஷங்களிலும்காணும் குறிகளும் ஒரேமாதிரிஎன்றும் சொன்னோம். கடிவாய் அதன் பக்கபிரதேசங்கள் மரத்துப்போதல், மயக்கம், தலைசுற்றுதல் கண்மஞ்சள் அடைவது, வாந்தி (இதுஅபூர்வமாகதோன்றும்) வீக்கம், மாரடைப்பு, ஞியாபகத்தவறுதல், நீலநிறம் ஆகிய இவைகள் பிரதான குறிகள். இந்த குறிகளில் சில நிவர்த்தியாகும். சில இரண்டு அல்லது மூன்று நாள் நீடித்திருக்கும். விஷவேகம் நீங்கியவுடன் இக்குறிகள் தானாகவே விலகிவிடும்ஆகையால் அநேகமாக இவைகளுக்குத் தனியாக சிகித்சை வேண்டுவதில்லை. விஷவேகம் நீங்கியபிறகும் சில நீடித்திருக்குமாகில் அவைகளுக்கும் தனியாக சிகித்சைசெய்யவேண்டியது அவசியமே. உதாஹரணமாக கடிவாயில் சிலருக்குபுண் உண்டாகின்றது. அதற்கு சிலசமயங்களில் பலநாட்கள்கூட சிகித்சை செய்யவேண்டியதாகி விடுகின்றது. இந்த இருவகை சர்பகடிகளுக்கும் (அதாவது உண்மைகடி, சங்காவிஷம்) கைகண்டமருந்தாவது—யோகநரசிம்மம்:—

| | | |
|---|---|---|
| எருக்கிலை | நான்கு | பாகம் |
| புகையிலை | ஒரு | ,, |
| துளசியிலை | ,, | ,, |
| குப்பைமேனியிலை | ,, | ,, |
| கருடப்பச்சையிலை | ,, | ,, |
| மிளகு | ,, | ,, |

செய்முறை—எருக்குஎன்பது சாமான்ய எருக்கஞ்செடி இதன் பச்சை இலைகளை கொண்டுவந்து அதன் நரம்புகளை வெற்றிலை நரம்புகளை கிழித்தெறிவதுபோல எறிந்துவிடவும். இலையின் உள்புறம் வெளிப்புறங்களில் இருக்கும் சுனையைப்போக்கவேண்டும். சுத்தஜலத்தில் மேற்படி இலைகளை இருபுறமும் தேய்த்தால் சுனைபாகம் நீங்கிவிடும். இவ்விதம் செய்து இலைகள் உலராமலும் பாலில்லாமலும் ஜலசம்பந்தமில்லாமலும் (துணியில்துடைத்து விடவேண்டும்) தயார் செய்துகொள்ளவும். புகையிலையை உலர்ந்ததாக எடுத்து அதன் இலையை விரித்து மண் முதலியவையில்லாமல் தட்டிவிடவும். பிறகு இதை



சிறுதுண்டுகளாகவெட்டி வெய்யிலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும். இதன்காம்பை நீக்கவேண்டியதில்லை. இவ்விதமே மிளகையும் இடித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவும். துளசி, என்பது சாமான்யமாக எல்லோருக்கும் தெரிந்ததே. இதன் இலை, குப்பைமேனியிலை, கருடப்பச்சையிலை, இவைகளை பூச்சிபுழுவின்றி மண்ணின்றி துடைத்து அல்லது ஜலத்தைவிட்டலம்பி துணியில் ஜலமில்லாமல் துடைத்து பச்சையாகவே வைத்துக்கொள்ளவும். கருடப்பச்சையென்பது ஓர் செடி. இது எல்லாஇடங்களிலும் அகப்படுமென்றே நினைக்கிறேன். பவானியில் இரண்டு செடிகள் இருக்கின்றன (மாதிரிவேண்டுபவர்கள் இரண்டணா தபால் ஸ்டாம்பு அனுப்பினால் தபாலில் அனுப்புவோம்) இந்தநான்கு பச்சிலைகளையும் கல்வத்தில் போட்டு ஜலம் விடாமல் நன்றாக அரைக்கவும். வெண்ணைபோல விழுதாக ஆனபிறகு வஸ்திரகாயம் செய்த பொடிகளைப் போட்டு சேர்த்து அரைக்கவும். பச்சிலை விழுதும் இந்த பொடிகளும் நன்றாக கலந்து போகும் வரையில் அரைக்கவும். ஜலம் விடக்கூடாது. சுண்டைக்காயளவு மாத்திரை உருட்டி வெய்யிலில் உலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும்.

குறிப்பு—மேற்படி மாத்திரைகள் வெய்யிலில் உலர்ந்தால் அளவு சிறுத்துப்போகும். இதில் கால்மாத்திரைமுதல் ஒருமாத்திரைவரை கொடுக்கலாம். குளிர்ந்தஜலம் அரை அவுன்சில் மருந்தைப்போட்டு கரைத்து குடிக்கச்சொல்லலாம். தினம் ஒருவேளை கொடுக்கவும். ரிஷபலம் முதலியவைகளை அனுசரித்து இரண்டு அல்லது மூன்று நாள்தினம் காலை ஒருவேளை கொடுக்கலாம். குழந்தைகளுக்கும் வயதுக்குத்தக்கவிதமாக அளவுடன் கொடுக்கலாம். ஒருவயது குழந்தைக்கு அரைக்கால் மாத்திரை உபயோகிக்கலாம். கர்பிணிகளுக்கும் கொடுக்கலாம். முன்சொல்லிய சங்காவிஷங்களிலும் உபயோகிக்கலாம். இம்மருந்தின் வேகத்தால் சிலருக்கு அபூர்வமாக ஒருதடவை வாந்தியாவதுண்டு. அவ்விதமே ஒருதடவை மலம் போவதுமுண்டு. விஷக்கடிகளில் சில கடுமையான கேசுகளில் சிலருக்கு மாரடைப்பு காணுவது உண்டு. இந்நிலைமையில் விஷமுஷ்டி தைலத்தை உள்ளுக்குக் கொடுத்து குணம் கண்டதுண்டு. (மேற்படி தைலத்தை பிறகு ஒருசமயம் எழுதுவோம்) விஷமுஷ்டி யென்பது தென்மொழியில் எட்டிக்கொட்டை என்பார்கள். விஷமுஷ்டி தைலத்திற்கு பதிலாக ஆங்கிலவைத்தியர்கள் உபயோகிக்கும் ஸ்டிரிக்னைன் (இது எட்டிக்கொட்டையிலிருந்து எடுக்கப்படும் ஓர் உப்பு) என்ற மருந்தும் இஞ்ஜக்ஷன் மூலமாக உபயோகித்து நல்லகுணம் கண்டதை கவனித்திருக்கிறேன்.

பத்தியம்—விஷவேகம் அனேகமாக ஒருநாளில் தணிந்துவிட்டால் பிறகு உசிதமான உணவு கொடுப்பது வழக்கம். சிலநாள் நீடிக்குமாகில் அவசியமாகில் அரிசி குருணையை நீராக உப்பின்றி கஞ்சிபோட்டு கொடுப்பது வாடிக்கை.

இந்தமருந்தை பலதடவைகளில் நான் உபயோகித்திருக்கிறேன். எனக்கு இதைச்சொல்லிக்கொடுத்த பெரியோர்கள் பலதடவைகளில் உபயோகித்துவந்ததைக் கண்டிருக்கிறேன். என்னிடமிருந்து தெரிந்துகொண்டபலர் இதை உபயோகித்து வந்ததை நேரில்பார்த்தும்இருக்கிறேன். கேட்டும் இருக்கிறேன். இது மிகுந்த பலனையளிக்கிறதென்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால் பாம்புகடியில் சரியான விவரம் சேகரிப்பது அடியில்கண்ட காரணங்களால் கஷ்டமாகவிருக்கின்றது.

(1) கடித்த பாம்புகளை நேரில் பார்க்கமுடியாமலிருப்பது.

(2) பாம்புகளின் விஷபலாபலமும் கடிகளின் விஷபலாபலமும் அறிய சாத்தியமாகாமலிருப்பது.

(3) நோயாளி, உண்மையான விஷம் அல்லது சங்காவிஷம் என்பதை அறிவிக்கமுடியாத நிலைமையிலிருப்பது.

(4) மருந்தை உபயோகித்தவர்கள் பலராய் இருப்பது.

(5) இதை நன்றாக பரிசீலனைசெய்ய திரவ்யவசதி போதாமலிருப்பது.

இருந்தபோதிலும் விஷகடிகளுக்கு இம்மருந்து கூடியமட்டில் ஏற்றதாகவிருக்கின்றது. இம்மருந்தை உபயோகித்த பலகேசுகளில் சந்தேகமின்றி விஷலக்ஷணம் அமையப்பெற்றதும் வேறுவிதமாக சந்தேகிக்கக்கூடாததுமான ஒருகேசின் விவரத்தை குறிப்பிடுகிறேன்.

பவானியில் ஆற்றோரமுள்ள ஒருவீட்டில் ஒன்பதுமாதமுள்ள ஒரு குழந்தையை சர்ப்பம் தீண்டிற்று. இச்சம்பவம் சுமார் காலை 12-மணிக்கு நேர்ந்தது. அச்சமயம் ஒருவரும் இதைகவனிக்கவில்லை. குழந்தை அழஆரம்பித்தது. விஷயம் அறியாத தாயார் பாலைப்போட்டி குழந்தையை தூளியில் தூங்கவைத்தாள். குழந்தை தூங்குவதாக தாயார் நினைத்தாள். இரவு மணி 8 ஆயிற்று. குழந்தை அப்பொழுதும் விழிக்கவில்லை. நேரமானதால் பால்போட்ட குழந்தையை தாயார் எடுத்தாள். பார்த்தவுடன் குழந்தைமுகம் விகாரமாய் இருந்தது. கை கால் துவண்டிருந்தது. உடம்பு சில்லிட்டு இருந்தது. இதைக்கண்டு தாயார் பயந்து என்னைவரவழைத்தார். நான் குழந்தையை பரீக்ஷித்துப்பார்த்தேன். குழந்தைக்கு அம்மைபோட்டி தலைக்கு ஜலம் விட்டிருந்தபோதிலும் அம்மைப்புண்கள் காயாதநிலைமையில் இருந்தன.

தொடரும்.

---



அதை சாம்பல்செய்து அந்த சாம்பல் அளவுக்கு நாலு பங்கு சுத்தநீர் விடவேண்டும். அதாவது சாம்பல் ஒருபடியிருக்குமாகில் அதற்கு நாலுபடி ஜலம் விடவேண்டும். ஒரு ஈயபாத்திரத்தில் போட்டு நன்றாக கையால் பிசைந்து கலக்கிவைக்கவேண்டும். ஒரு ராத்திரிமுழுவதும் அப்படியே வைத்திருந்து மறுநாள் தெளிவு ஜலத்தை ஒரு மண்சட்டியில் இறுத்து அடுப்பேற்றி வற்றவைக்கவும். ஜலம் வற்றினபிறகு உப்பு அடியில் கட்டும். வெண்மையின்றி சாதாரண சாம்பல் நிறமாக அதாவது சற்று கருப்பு நிறமாக இருக்கும். அதை எடுத்து ஒரு கல்கார்க் சீசாவில் பத்திரப்படுத்திக்கொள்ளவும். குளிர்ந்த காற்று பட்டாலும் அல்லது ஈரக்கசிவு இருந்தாலும் இந்த உப்பு ஜலமாகிவிடும். ஆகையால் சீசாவை வெய்யிலில் காயவைத்து உப்பைப்போட்டு மூடிவைக்கவும். கல்கார்க்கு மூடியாக இருக்கவேண்டுமென்று ஏற்கனவே சொல்லியுள்ளோம். பிடாலவணம், சார்வச்சாலவணம் ஆகிய இரண்டு உப்புகளும் தமிழ் நாட்டில் கிடைப்பது கடினம். வடதேசத்திலிருந்து சம்பாதித்துக்கொள்ளவேண்டும். எலுமிச்சம்பழ ரசத்தைப் பிழியும்பொழுது அது கெடாமலிருப்பதற்காக ஒரு ஈயப்பாத்திரம் அல்லது வெள்ளிப்பாத்திரத்தில் இந்த உப்புகளைப்போட்டு மேல் ஒரு துணியைப்போட்டு எலுமிச்சம்பழ ரசத்தைப்பிழிந்தால் அது வடிகட்டியாவதுடன் உப்பின் சம்பந்தத்தால் பழரசம் கெடாது. ரசத்தைப் பிழியும்பொழுது பழத்தை கசக்காமல் நறுக்கிப்பிழியவேண்டும். பழத்தைக்கசக்குவதால் ரசம் கசந்து கெட்டுப்போகின்றது. இவ்விதம் தயாரித்த ரசத்தில் அளவுப்படி சங்கத்தை அதாவது குழந்தைகளுக்குபால்போட்டும் சங்கத்தை தணல் நெருப்பில் காய்ச்சி ஒரு இடுக்கியால் எடுத்து தோய்க்கவேண்டும். அக்காலத்தில் சங்கத்தின் சிலபாகங்கள் ரசத்தில் பொடியாக உதிரும். பொடியாக அல்லது சில்லுகளாக உதிராத கெட்டிபாகத்தை மறுபடியும் எடுத்து முன்போல தணலில் காய்ச்சி தோய்க்கவும். இவ்விதம் ஏழுதடவை செய்யவும். தட்டான் அல்லது கொல்லன் உலைமாதிரி செய்து அதில் கரிகளைப்போட்டு துருத்திவைத்து ஊதி அந்த தணலில் இந்த காரியம் செய்யவேண்டியது. பிறகு ரசத்தை தெளிவாக மற்றொரு பாத்திரத்தில் இறுத்துக்கொண்டு அடியில் தங்கியிருக்கும் சில்லுவகையறுக்களைக் கல்வத்தில் போட்டு நன்றாக அரைக்கவும். வெண்ணைபோலாகும்வரை அரைக்கவேண்டும். ரசம் கந்தகம் இவைகளை முன்போல சுத்திசெய்து கல்வத்திலிட்டு அரைத்தால் கருப்பான பொடியாகும். நாபிக்கிழங்கு நீங்கலாக கடைசாமான்களை இடித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவேண்டும். ஏற்கனவே அரைத்த சங்கத்துடன் நாபிக்கிழங்கையும் சேர்த்து அரைத்து நன்றாக வெண்

ணைபோலானபிறகு ரஸகந்தகப்பொடியைப்போட்டு அரைத்து பிறகு கடைசாமான் பொடிகளைப்போட்டு அரைக்கவேண்டும். பெருங்காயத்தை கல்வத்தில் தனியாகப் போட்டு பொடிசெய்து மேற்படி விழுதுடன் கலந்துகொள்ளவும். இறுத்துவைத்த பழரசம் முழுவதும் அந்தவிழுதில் இஞ்சவேண்டும். ரசம் அதிகமாயிருந்தால் கல்வத்துடன் அரைத்த விழுதை வெய்யிலில்வைத்து ரசம்இஞ்ச இஞ்சவிட்டு பூர்த்திசெய்து பிறகு மெழுகுபதமான அவஸ்தையில் குளிகையாக உருட்டவேண்டும்.

குறிப்பு :— இம்மருந்தை மேற்படிவியாதியில் எல்லாநிலைமைகளிலும் உபயோகிக்கலாம். சந்தனக்கல்லில் பொடிசெய்து நாக்கில் போட்டால் தானாக கரைந்து உள்ளேபோகும். அவசியம் நேர்ந்தபோது காய்ச்சல் காலங்களிலும் உபயோகிக்கலாம். இவ்வியாதியில் சொன்னமருந்துகள் அதாவது கட்டுமருந்து, சிந்தூரம், சங்கவடி ஆக மூன்றையும் நிலைமைக்குத் தக்கவிதமாக உபயோகித்தால் பெரும்பான்மையான கேசுகள் உயிர்தப்பும். 136-வது பக்கத்தில் சொல்லப்பட்ட சிந்தூரத்தில் வீரம் சேர்ந்திருக்கின்றது. ஔஷத சாரம் என்ற தலைப்பில் ஒவ்வொரு வியாதிக்கும் விஸ்தாரமாக மருந்துகளும் செய்முறைகளும்பஸ்ம சிந்தூர முறைகளும் சுத்திமுறைகளும் விவரமாக சொல்லப்போவதால் இவ்விடம் சுருக்கமாக மருந்துகளை சொல்லியிருக்கிறோம். மருந்துகளில் வீரத்தை சேர்க்கும்பொழுது சுத்திசெய்தே சேர்க்கவேண்டும். நமது சரக்குகளுக்குள் வீரத்தைவிட கொடியவிஷம் கிடையாது,

## வீரத்தை சுத்திசெய்யும் விதம்.

தேவையான வீரத்தை கட்டியாகவாவது அல்லது பொடியாகவாவது எடுத்து ஒருவெள்ளைத்துணியில் முடிந்து உத்தாமணி என்றும் வேலிப்பருத்தி என்றும் சொல்லுகிற ஒரு கொடியை இடித்து ரசம் பிழிந்து வடிகட்டி ஒரு சட்டியில் முக்கால்வாசி மேற்படி ரசம் விட்டு அதில் தோளாயந்திரமாக வீரமுடிப்பைவைத்து இரண்டுமணி எரிக்கவும். சுத்தியாகும். எடுத்து வெய்யிலில் உலர்த்திக்கொண்டு சிந்தூரத்தில் சேர்க்கவும். இதே சுத்தியை மற்ற மருந்துகளிலும் வீரத்திற்கு செய்யலாம்.

**தோலாயந்திரமாவது :—** சுமார் சின்னபடியில் ஒன்றரைபடி ஜலம்பிடிக்கக்கூடிய ஓர் மண்சட்டியை எடுத்துக்கொள்ளவும். அந்த மண்சட்டிக்குவாய் அதிக அகலமில்லாமல் சுமாராகப்பார்த்து எடுத்துக்கொள்ளவும். அந்த சட்டியில் முக்கால் வாசிக்கு ரசத்தை ஊற்



றவும். சட்டியின்வாயில் குறுக்காக ஓர் குச்சியைவைத்து வீரமுடிப்பை அதில் கட்டித்தொங்கவிடவேண்டும். அதாவது வீரமுடிப்பு ரசத்தில் முழுகி அடிசட்டியில் படாமல் அடிசட்டிக்கி இரண்டு அல்லது மூன்று அங்குலஉயரத்தில் தொங்கும்படி வீரமுடிப்பை ஒரு கயிரால்கட்டி தொங்கவிடவேண்டும். வீரமுடிப்பை நன்றாக கயிரால் கட்டாவிட்டால் ரசம் நெருப்பால்கொதிக்கும்பொழுது கட்டிலிருந்து நழுவி கீழேவிழுந்துவிடும். இவ்விதம் தொங்கவிட்டபிறகு சட்டி வாயில் ஓர் அகல் அல்லது வாணுப் மூடி அடுப்பிலேற்றி எரிக்கவேண்டும். எந்தவிரகானாலும்சரி. கணக்குப்படி எரித்து சட்டி ஆறிய பிறகு வாயில் இருக்கும் குச்சியை எடுத்தால் அதில் கயிறும் வீரம் முடிந்ததுணியும் தான்தெரியும். வீரம் அல்பசுடுகைபட்டபோதிலும் கரைந்துவிடும் சுபாவமானதால் அது நெருப்பு உஷ்ணத்தில் கரைந்து உருகி முடிப்புதுணியிலிருந்துரசத்தில் விழுந்து சட்டியின்அடிபாகத்தில் அப்பிக்கொள்ளும். ஆகையால் சட்டியிலிருக்கும் ரசத்தை வெளியில் ஊற்றிவிடவும். பிறகு சுத்தஜலம் ( பச்சைஜலம் ) சட்டிநிரையவிட்டு அதையும் ஊற்றிவிடவும். இவ்விதம் இரண்டு தடவை செய்யவும். ஏனெனில் வீரத்துடன் சேர்ந்திருக்கும் பச்சிலை ரசத்தைக்கழுவுவதற்காக இவ்விதம் செய்யவேண்டும். இவ்விதம் கழுவியபிறகு அடிச்சட்டியில் கெட்டியாக ஒட்டிக்கொண்டிருக்கும் வீரத்தை சுரண்டி எடுத்துக்கொள்ளவும். தென்னை ஓலை அல்லது பனை ஓலை இவற்றால் வழித்துக்கொள்ளவும். பிறகு வெய்யிலில் வைத்து நன்றாக காய்ந்தபிறகு மருந்தில் அளவுப்படி சேர்த்துக்கொள்ளவும். இந்த சுத்தி மிகவும் உத்தமமானது. தோஷம் நன்றாக நீங்கிவிடுகின்றது. இன்னுமொரு ரகசியத்தையும் இங்கு குறிப்பிடுதல் பொருந்தும். அதாவது வீரம், ரசம், இவையிரண்டும் கொடிய பாஷாணங்கள். இவைகளை உபயோகிக்கும் பொழுது அதற்கு சமயிடை கந்தகத்தைச் சேர்த்துவிட்டால் அதன் கொடியவேகம் தணிந்துவிடுகின்றது. ஆகையால் வீரம், ரசம் இவைகள் சேர்ந்த எந்த மருந்திலும் கந்தகம் சேர்ந்திருந்தால் கைகூசாமல் தாராளமாக அம்மருந்தை உபயோகிக்கலாம். ரசத்தின் வேகத்தைத்தணிக்க கந்தகஜாரணம் சொல்லப்பட்டிருக்கின்றது. அவைகளை விவரமாக ஔஷத சாரத்தில் சொல்லுவோம்.

**ரக்தபித்தம்—Haemorrhage.** இதுஓர் அபூர்வ வியாதி. இவ்வியாதிக்கு ஆங்கிலத்தில் பெயர் கிடையாதென்றே சொல்லவேண்டும். ஹெமரேஜ் என்று சுமாராக ஓர் பெயர் நாம் இட்டதேயன்றி ஆங்கில வைத்திய நூல்களில் இவ்வியாதியைப்பற்றிய பிரஸ்தாபமே கிடை

யாது. ஒரு பெரிய வைத்தியருடையகாலத்திற்குள் இரண்டு அல்லது மூன்று கேசுகள் நேருவதுகூட அபூர்வம். இவ்வியாதியைப்பற்றி சுதேசநூல்களே விரிவாகக்கூறுகின்றன. இவ்வியாதி அபூர்வமாகிலும் கஷ்டசாத்தியமாக விருக்கின்றது. நான் வைத்தியத்தொழில் செய்த இருபத்தைந்து வருஷங்களில் நான்கு கேசுகளேநேர்ந்தன.

இதன் லக்ஷணம்—கண், காது, மூக்கு, மயிர்கால்கள், மூத்திரம், மலதுவாரங்கள், வாய் இவைகளில் ரக்தம் வெளிவரும். உடம்பிலிருந்து எந்த வழியாகவாவது ரக்தம் வெளியேறினால் அதை ரக்த பித்தமென்று சொல்லுவார்கள். ஆனால் பலவியாதிகளில் ரக்தம் வெளியேறும். ஆகையால் ரக்த பித்தத்தை நிதானித்து தெரிந்து சொல்லவேண்டும். டையபிடைஸ் என்ற நீரிழிவு வியாதியிலும் சிலமலேரியா காய்ச்சலிலும் மூத்திரப்பை முதலியவைகளில் புண்வருவதாலும் மேகவியாதிகளிலும் மூத்திரம் ரக்தமாகஇறங்கும். அது ரக்தபித்தமல்ல. அவைகளின் மருந்துவேறு, ரக்தபித்தத்தின் மருந்துவேறு. இவ்வியாதிஉண்டாகும் விதத்தைப்பற்றி இருமதங்கள் இருக்கின்றன. சரகரும், வாக்படரும் கூறுவதாவது. ரக்தத்திற்கு நிறம்கொடுக்கும் வஸ்துவுக்கு ரஞ்ஜக பித்தமெனப் பெயர். யகிருத் என்ற லிவரிலிருந்து உண்டாகும்பித்தமும் நிறத்துடன் கூடியதுதான். யகிருத் (liver) ப்லீஹா (spleen) என்ற கல்லீரல் மண்ணீரல்களிலும் மற்றும் பித்தஸ்தானங்களிலும் இயற்கைக்கு அதிகமாக பித்தம் உத்பத்தியாகி அந்தபித்தமே பலவழிகளால் வெளியாகின்றது. சர்வசரீரத்திலும் ஓடும் ரக்தத்திலும் இப்பித்தம் வியாபித்திருக்கின்றது. ஆனால் லிவர் என்ற ஈரலில் ரக்தம் ஓடும்பொழுது அவ்வுறுப்பு பித்தத்தை தனியாக்குகின்றது. ஆகவே பித்தமென்பது ரக்தத்தின் ஓர்விகாரம் ஆகின்றது. இப்பித்தம் அதிகமாகி வெளியேறும்பொழுது ரக்தத்தின் நிறம் முதலியவைகளை அடைந்திருப்பதால் ரக்தம் போல பார்வைக்குத் தோன்றுகின்றதேயன்றி உண்மையில் வெளியேறுவது பித்தம் தான், என்பதே. சுசுருதம் முதலியோர் கூறுவதாவது—வெளியேறும் பித்தத்துடன் ரக்தமும் கலந்துதான் போகின்றது. ஆகையால் ரக்தபித்தமென பெயர் உசிதம்தான் என்பதே. அநுபவத்தில் இவ்விருவசனங்களும் உண்மையென்றே சொல்லவேண்டும். சிலருக்கு தனிபித்தமும் சிலருக்கு ரக்தம் கலந்தபித்தமும் வெளியேறுவதைப்பார்க்கலாம்.

இதன் காரணம்—மிகுந்த க்ஷாரமானபதார்த்தங்கள், உஷ்ணகுணமுள்ளவைகள், புளிப்பு, உப்பு, அதிகம் சேருதல், ஆகிய இவைகளாலும் அதிகமாக வெய்யிலில்அலைவதாலும், நெய், பால், தயிர் முத



லிய சாரவஸ்துக்கள் சேர்க்காமலேயே வரட்டு ஆகாரங்களையே உட்கொள்ளுவதாலும், அதிகமாக சாராயம் குடித்தல் சுருட்டு உபயோகித்தல் முதலியவைகளாலும்லிவர் என்ற ஈரல் பாதிக்கப்படுகின்றது. ஆகவே இயற்கைக்கு அதிகமாக பித்தம் உத்பத்தியாகின்றது. ரக்தமும் கெடுகின்றது. காய்ச்சல் வியாதியில் பித்தத்தின் உஷ்ணகுணம் மிகுதிப்படுகின்றது. இவ்வியாதியில் உஷ்ணகுணம் சிலசமயங்களில் மிகுதிப்படலாம். மிகுதிப்படாமலுமிருக்கலாம். பித்தம் மாத்திரம் மிகுதியாக உத்பத்தியாகின்றது.

முற்குறிகள்—தலைகனத்தல், அரோசகம், குளிர்ச்சியில்நோக்கம், புளித்த ஏப்பம், நெஞ்சில் புகைச்சல், வாந்தி, இருமல், மூச்சு, தலைகிறுகிறுப்பு, ஓய்ச்சல், இருப்புகளிம்பு, ரக்தம், மீன், இவைகளின் நாற்றம் வாயில் வீசுதல், ஸ்வரம் கம்முதல், கண், முகம், இவைகளில் மஞ்சள், பச்சை, அல்லது ரக்தநிறம்தோன்றுதல், பச்சை, மஞ்சள், சிகப்பு இந்த நிறங்களின் பேதத்தை அறியமுடியாமை, ஸ்வப்நத்தில் இந்தநிறங்களைப்பார்த்தால் ஆகியஇவைகள் முற்குறிகள். அதாவது இவ்வியாதி உண்டாவதற்குமுன் உண்டாகும் அடையாளங்கள்.

குறிப்பு—இவ்வியாதி சிலருக்கு காய்ச்சலுடன் வருகின்றது. சிலருக்கு காய்ச்சலில்லாமலும் வருகின்றது. சிலருக்கு காய்ச்சல், அடித்து தணிந்தபிறகு இவ்வியாதிகாணுகின்றது. இவ்வியாதிமேல் நோக்குமாகில் மூக்கு, கண், காது, முகம் இவைகளின் வழியாக ரக்தம்வரும். கீழ்நோக்குமாகில் மூத்திரதுவாரம் மலதுவாரம் இவைகளின் வழியாக ரக்தம் போகும். மயிர்கால்கள் வழியாகவும் ரக்தம் கசியும் அதாவது வியர்வை விடுவதுபோல இருக்கும். இவ்வியாதி இருவழிகளிலும் வியாபிக்குமாகில் சரீரத்தில் எல்லாபாகங்களிலும் ரக்தம் வெளியேறும். இவ்வியாதி நான்குவிதமாக பிரிக்கப்பட்டிருக்கின்றது.

வாதரக்தபித்தம்—வாயு தன் காரணங்களால் பிரகோபத்தையடைந்து இவ்வியாதியை யுண்டுபண்ணுமாகில் அதன் லக்ஷணம்—வெளியேறும் திரவங்கள் சிகப்பாகவாவது அல்லது கருப்பு சிகப்பு கலந்த நிறமாகவாவது இருக்கும், நுரைத்துப்போகும். தண்ணீர் போல மெல்லியதாயிருக்கும். பசையற்றிருக்கும்.

பித்தரக்தபித்தம்—பித்தம் அதிகமாகி உண்டாகும் இவ்வியாதியின் லக்ஷணம்—வெளியேறும் திரவங்கள் சுத்த கருப்பாகவாவது மைபோலவாவது இருக்கும். அல்லது கோமூத்திர நிறமாகவிருக்கும். அல்

லது ஆலம்விழுது முதலியவை இடித்துப்போட்ட கிஷாயவர்ணமாகவிருக்கும்.

கபரக்தபித்தம்—தன்காரணங்களால் கபம் மிகுதியாகி காணும் இவ்வியாதியின் லக்ஷணம்—வெளியேறும் திரவம் குழம்புபோல் கெட்டியாகவிருக்கும். அதாவது அதிக நீராகவிருக்காது. வெளுப்பாகவிருக்கும். வழவழப்பாகவும் பசையுள்ளதாகவும் இருக்கும்.

திரிதோஷ ரக்தபித்தம்—முன்சொல்லிய மூன்று லக்ஷணமும் கலந்து காணப்படின் அது திரிதோஷ பிரகோபத்தால் உண்டான வியாதி என்று அறியவும்.

குறிப்பு—இவ்வியாதி மேல்நோக்கிவருமாகில் அது சாத்தியம். கீழ்நோக்கிப்போகுமாகில் அதுயாப்யம். அதாவது வியாதியை நிச்சேஷமாக விலக்கமுடியாது தத்கால சாந்தியாக மருந்துகளால் தணிக்கலாம். இரண்டுவழிகளாலும் இவ்வியாதி காணுமாகில் அப்பொழுது அது அசாத்தியமாகும். இதை ஒட்டிவரும் வியாதிகளாவன—சரீர துர்பலம், மூச்சு, இருமல், சுரம், வாந்தி, போதை, எரிச்சல், மூர்ச்சை, ஆகாரம் உட்கொண்டபிறகு புளித்த ஏப்பம் வருதல், மார்புவலி, தாகம், வயிற்றுவலி, தலைவலி, துர்நாற்றத்துடன் காரியுமிழ்தல், அன்னதுவேஷம், ஜீர்ணமாகாமை, ஆகிய இவைகள். இவ்வியாதியில் வெளியேறும் திரவம், மாமிசம் அலம்பினநீர்போலவும், நாகப்பழ நிறம் போலவும், இந்திரவில்போல பலவர்ணங்களமைந்தாவது இருக்குமாகில் இவ்வியாதி அசாத்தியம். ஜ்வரம் முதலியவியாதிகளால் இளைத்தவனுக்கும், கிழவருக்கும், ஆகாரமே உட்கொள்ளாதவர்களுக்கும் அதாவது அரோசகத்தாலோ அல்லது தரித்திரத்தாலோ அல்லது வேறுகாரணங்களாலோ எவ்வித ஆகாரமும் பலநாள் உட்கொள்ளாதவர்களுக்கும், அக்னிபலமில்லாதவர்க்கும், இவ்வியாதி காணுமாகில் அது அசாத்தியமே இவ்வியாதியில் அடிக்கடி திரவம் வெளியேறினும் அசாத்தியமே. உஷ்ணமில்லாத காலங்களில் ஒட்டிவரும் வியாதிகளில்லாமல் இவ்வியாதியிருக்குமாகில் அது சுலபசாத்தியம். மிகுந்த வேகமில்லாமல் விட்டுவிட்டு திரவம் வெளியேறுமாகில் அப்பொழுதும் சுலபமே.

சிகித்சை—இவ்வியாதி மிகுந்த உஷ்ணத்தால் உண்டாகின்றதாதலால் காரம், புளிப்பு, உப்பு, இவைகளில்லாமல் ஆகாரம் உட்கொள்ளவேண்டும். பால் அல்லது பால்மிகுந்த கஞ்சிதான் பத்தியமாக உட்கொள்ளவேண்டும். அம்மை முதலியவியாதிகள் முதலில்கண்டு பிறகு இவ்வியாதி வரக்கூடும். அவைகளிலும் இந்த பத்தியமேதான்.



அம்மைக்குப்பிறகுகாணும் இவ்வியாதியில் மருந்து கொடுக்கக்கூடாதென்று சிலர் நினைப்பதுமுண்டு. அதுமிகவும் மதியீனம். இவ்வியாதி சுபாவத்திலேயே கடினமாதலால் மருந்தின்றி சௌக்கியமாகாது. அதிலும் வியாதிகண்டவுடனேயே சிகித்சை செய்யவேண்டியது அவசியம். இவ்வியாதிக்கு முந்தியாவது அல்லது வியாதியுடனாவது முக்கியமாக காய்ச்சல் சேர்ந்திருப்பது சகஜம். காய்ச்சலுக்கு தனியாக சிகித்சைவேண்டியது அவசியமில்லை. ஆனால் காய்ச்சல் அதிகமாகும்படி அபத்தியம் செய்யக்கூடாது. உதாஹரணமாக மிகுந்த உஷ்ணத்தால் இவ்வியாதி வந்தபோதிலும் உஷ்ணசாந்திக்காக பச்சைநீரில் ஸ்நானம் செய்வதுகூடாது. இவ்வியாதியில் காய்ச்சலில்லாதகாலத்திலும்கூட பத்தியமாகவே இருக்கவேண்டும். ஏனெனில் அல்ப அபத்தியத்தாலும் காய்ச்சல்வந்துவிடலாம். காய்ச்சலும் இவ்வியாதியுடன் சேர்ந்தால் கஷ்டசாத்தியமாகிவிடும். ஆகையால் காய்ச்சலையுண்டாக்கக்கூடிய விதமாகஆகாராதிகளை உட்கொள்ளலாகாது. நோயாளி பூர்ணமாக ஓய்வுஎடுத்துக்கொள்ளவேண்டும். கொஞ்சமும் வெய்யிலில் அலையக்கூடாது. வெள்ளாட்டுப்பாலை பச்சையாகவும் அல்லது காய்ச்சியும் உபயோகிப்பது மிகவும் நல்லது. அடுத்தபடியாக பசும்பாலை உபயோகிக்கலாம்.

இவ்வியாதிக்கு மருந்து ஆடாதோடையிலையை பிடி எடுத்து நன்றாக சுருட்டி ஆமணக்கு இலையை மேலே சுற்றி களிமண்ணால் விரல்பிரமாணம் அப்பி அதை புடம்போட்டு எடுத்து எல்லாவற்றையும் நீக்கி ஆடாதோடை யிலையை மாத்திரம் கசக்கிப்பிழிந்து அந்த ரசத்தில் அரை அவுன்சு எடுத்து அதில் உத்தரணீ தேனும் கால் ரூபாயிடை கல்கண்டையும் போட்டு கொடுக்கவும். இவ்விதம் தினம் மூன்று தடவை கொடுக்கவும்.

குறிப்பு:— ஆடாதோடை இலை சற்று துளிராக பொருக்கிக்கொள்ளவேண்டும். தேவையான தழையை எடுத்துக்கொள்ளலாம். ஒரு பிடிதான் இருக்கவேண்டுமென்ற நிர்பந்தம் கிடையாது. உரலில் சற்று இடித்து பிறகு அதை கொட்டையிலையால் சுற்றி வாழை நார் அல்லது பச்சைநாணல் ஏதாவது ஒன்றால் நன்றாக சுற்றி கட்டிவிடவும். களிமண்ணை கெட்டியாக அதாவது நீராக இராமல் பிசைந்து கைவிரல் பிரமாணம் மேலே அப்பிவிடவும். காயவைக்கவேண்டிய அவசியமில்லை. அப்படியே பசும் சாணி முட்டைகளை அடுக்கி அதில் வைத்து நெருப்பிடவும். மேலே பூசிய களிமண் நெருப்பால் சற்று சிவக்கும் சமயம் பார்த்து ஏதாவது ஒரு சாதனத்தால் அந்த உருண்டையை அப்புறப்படுத்தி மேல்மண்ணை அப்புறப்படுத்தி உள்

ளிருக்கும் ஆடாதோடையிலையை சுடுகையுடன் கசக்கினல் ரசம் வரும். இதற்கு வடமொழியில் புடபாகம் எனப்பெயர். ஆடாதோடையிலிருந்து ரசம் வராதானதால் இவ்விதம் யுக்திசெய்து ரசத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த ரசம் எடுப்பதற்கு மற்றொரு வழியுமுண்டு. நூல்களில் அது சொல்லப்படாவிட்டாலும் குருமுகமாக பிரசாரத்திலிருக்கிறது. சுமார் இருபது அவுன்சு அல்லது அதற்கு அதிகமாக பிடிக்கக்கூடிய பெரிய சீசாவை சுத்தப்படுத்தி வைத்துக்கொள்ளவும். செம்மண் அல்லது புத்துமண் கொண்டுவந்து ஜலம் விட்டு சற்று அரைத்து அதில் இரண்டுவிரல் அகலமும் கிடைக்கக்கூடியவளவு நீளமுமுள்ளதான் துணிகளைப் பிரட்டி அந்த சீசாவுக்கு மூன்று அல்லது நான்கு சீலைமண்செய்து வெய்யிலில் நன்றாக காயவைத்துக்கொள்ளவும். ஆடாதோடை இலைகளை மண்வகையறு இல்லாமல் சுத்தப்படுத்தி ஒவ்வொருதழையாக அந்தசீசாவில் அடைக்கவும். ஒரு குச்சிகொண்டு குத்தி குத்தி அந்தசீசாவில் பூர்ணமாக அடைத்துவிடவேண்டும். தென்னை ஓலையின் ஈர்க்குகளை நாலு அங்குல நீளமுள்ளவைகளாக ஒடித்து அந்த சீசாவின் வாயில் சொருக வேண்டும். சீசாவை தலைகீழாக கவிழ்த்தால் கீழே விழாமலிருக்கும்படி அவ்வளவு கெட்டியாக சீசாவின்வாயில் ஈர்க்குகுச்சிகளை சொருக வேண்டும். அந்த சீசா உயரத்திற்கு சரியான அளவுள்ள ஓர் சட்டியைக்கொண்டுவந்து அதன் அடிபாகத்தில் ஓட்டைசெய்யவேண்டும். அதாவது அந்த சீசாவை சட்டிக்குள் கவிழ்த்தால் அந்த அடி சட்டியின் ஓட்டைவழியாக வெளிவந்து அந்த சீசாவின் கழுத்து சட்டியில் நிற்கவேண்டும். அதற்காக சட்டியின் அடிப்புறத்தில் ஓர் கோடுபோட்டுக்கொண்டு அந்தகோட்டின்மேல் கூரியவாளால் மெதுவாகத்தட்டி ஓட்டைசெய்யவேண்டும். அப்படி தட்டும்பொழுது சட்டியை கையில் தூக்கிக்கொள்ளவேண்டும். நிலத்திலேயே வைத்துத் தட்டினால் சட்டி உடைந்துவிடும். இவ்விதம் சட்டியை தயார்செய்தபிறகு அதில் சீசாவை தலைகீழாக அந்த ஓட்டையின்பேரில் கவிழ்த்து பிறகு சீசாவுக்கும் சட்டியின் ஓட்டைக்கும் நடுவிலுள்ள சந்துக்கு மண்பூசிவிட்டு உடனே உலர்ந்த பசும் முட்டைகளை சீசாவுக்கு நாலு பக்கங்களிலும் போடவேண்டும். முட்டைகளை பிட்டும் போடலாம். சௌகரியம்போல போட்டு சட்டியை நிரப்பிவிடவும். பிறகு நெருப்பு பற்றவைக்கவும். எல்லா முட்டைகளையும் போட்டு மேல் நெருப்பு வைத்தால் அடிவரையில் நெருப்பு பிடிக்க தாமதிக்கும். ஆகையால் ஆரம்பத்திலிருந்து அடிபாகத்திலும் நெருப்புபோடவேண்டும். சட்டியின் அள்ளைபாகங்களில் நாலு பக்கத்திலும் நான்கு சிறிய துவாரங்கள் செய்தால் புகை தாராளமாகவெளிபோகவும் உள்பக்கத்தில் காற்று



அடித்து எல்லா முட்டைகளில் நெருப்பு சுலபமாக பிடிப்பதும் சாத்தியமாகும். சட்டியை உயரமான ஓர் அடுப்பில் விழாமல்வைக்கவும். நெருப்பு பற்றிக்கொண்ட அரை மணிக்குள் சீசாவின்வாயிலிருக்கும் ஈர்க்குச்சிகளின் வழியாக புகைவரும். புகைகண்டவுடன் ஓர் பீங்கான் பாத்திரத்தை ஈர்க்குச்சிகளுக்கு நேர் அடியில் வைக்கவும். புகையுடன் சேர்ந்தே ரசம் சொட்டு சொட்டாக ஈர்க்குச்சிகளின்வழியாக கசியும். இந்த அளவுள்ள சீசாவிலிருந்து ஏறக்குறைய ஒன்று அல்லது ஒன்றரை அவுன்சுவரை ரசம் கிடைக்கும். சீசா பெரியதானாலும் சிறியதானாலும் அதற்குத்தக்க அளவு ரசம் கிடைக்கும். இந்த ரசத்தையும் உபயோகித்துக்கொள்ளலாம். இந்தரசத்தில் சிறிய அணுக்கள் கருப்புநிறமாக சில இருக்கும். அது அந்த தழையின் தைலபாகம். ஆகையால் அதையும் சேர்த்துக்கொடுக்கலாம். இந்த ரசம் இறங்கியபிறகு சீசாவைத்தூக்கினல் அது பின்னப்பட்டுவிடும். ஒவ்வொரு தடவைக்கும் புதிய சீசாதான் உபயோகிக்கநேரும். இந்த ரசத்தை உபயோகிக்கும்விதம். ஆடாதோடை கிஷாயம் செய்துகொண்டு அந்த கிஷாயம் இரண்டு அவுன்சில் இந்த சத்து முப்பதுதுளி முதல் அறுபதுதுளிவரைவிட்டு தினம் மூன்றுதடவைகொடுக்கலாம்.

**ரக்த பித்தத்திற்கு மருந்து.** பேயத்திமரத்தின் காய்களை இடித்து ரசம் பிழிந்து வேளை ஒன்றுக்கு அரை அவுன்சு ரசத்தில் ஒரு டிராம் தேன்விட்டு கொடுக்கவும். தினம் மூன்று வேளை கொடுக்கலாம்.

**குறிப்பு.** பேயத்திமரம் சாமான்யமாக எல்லா இடங்களிலும் காணப்படுகின்றது. அந்த மரத்தின் காய்கள் உருண்டையாகவிருக்கும். நன்றாக உரலில் இடித்து சற்று நீர் தெளித்து பிறகு இடித்து ரசத்தைப் பிழிந்து வடிகட்டிக்கொள்ளவும். இக்காய்களை உலர்த்தி வைத்துக்கொண்டால் சமயங்களில் உபயோகிக்க அனுகூலமாகவிருக்கும். உலர்ந்த காய்களை இடித்து கிஷாயம் செய்துகொள்ளவேண்டியது. அந்த கிஷாயத்தையும் இவ்விதமே உபயோகிக்கலாம்.

**ரக்த பித்தத்திற்கு மருந்து :—** சிறுநெருஞ்சிவேர், தண்ணீர்விட்டான் கிழங்கு, இவைகளின் ரசத்தை பாலில் விட்டு காய்ச்சி குடிக்கவும்.

**குறிப்பு :—** சிறுநெருஞ்சிவேரை கிஷாயம் செய்துகொள்ளவும். தண்ணீர்விட்டான் கிழங்கை இடித்து ரசத்தை எடுத்துக்கொள்ளவும். இவைகளில் வகைக்கு கால்படி எடுத்து பசும்பால் கால்படியில்விட்டு

பால்மாத்திரம் மீதியாகும்படி காய்ச்சி தினம் மூன்றுவேளை குடிக்கவும், இது மூத்திரத்தின் வழியாகப்போகும் ரக்தத்தை நிறுத்தும்.

ரக்த பித்தத்திற்கு மருந்து :— மாதளைமரத்தின் புஷ்பங்களை கையில் கசக்கி மூக்கில் சிலதுளிகள் அதாவது நாலு அல்லது ஐந்து துளிகள் பிழிந்தால் மூக்குவழியாக வரும் ரக்தம் நிற்கும். தினம் மூன்று தடவை செய்யவும். அருகம்பில்லை கசக்கி அந்த ரசத்தை மூக்கில் பிழிந்தாலும் ரக்தம் நிற்கும்.

ரக்த பித்தத்திற்கு மருந்து :— மலதுவாரத்தின்வழியாக வரும் ரக்தத்திற்கு அரைப்படி வெள்ளாட்டுப்பாலையும் அரைப்படி ஆடாதோடை கிஷாயத்தையும் கலந்து சகோஷ்ணமாகச்செய்து மலதுவாரத்தின்வழியாக பஸ்தி (எனிமா) செய்யவும். நிற்கும். இலவமரம் பிசின் அரைதோலா எடுத்து பொடிசெய்து பசும்பால் அல்லது வெள்ளாட்டுப்பால் கால்படியில் போட்டுக் காய்ச்சி குடிக்கவும். தினம் மூன்று வேளை சாப்பிடவும். மலத்துவாரத்தில்வரும் ரக்தத்தை நிறுத்தும். ஆலம்விழுது அல்லது ஆலம் துளிர்களை இடித்து ரசம்பிழிந்து அதற்கு சம இடையான பசம்பாலில்விட்டு பால் மீதியாகும்படி காய்ச்சி குடிக்கவும். அதாவது அரைக்கால்படி பால் குடிக்கவும். தினம் மூன்று வேளை உபயோகிக்கவும்.

கண்டாதி லௌஹம் :— தண்ணீர்விட்டான் கிழங்கு, சீந்தில், ஆடாதோடை, கொட்டைக்கரந்தை, குருந்தொட்டி, நிலப்பனைக்கிழங்கு, கருங்காலி, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, சிருதேக்கு, கோஷ்டம், வகைக்கு தோலா இருபது இடித்து ஒரு பானையில்போட்டு பச்சைநீர் பதினறுபடி (சின்னபடி) விட்டு, இரண்டுபடியாக வற்றவைத்து வடிகட்டி அந்த கிஷாயத்தில் அயசிந்தூரம் தோலா 48, கல்கண்டு தோலா 48, நெய் சின்னபடி ஒன்று, இவைகளைக் கலந்து ஓர் வாயகந்த தாம்ர பாத்திரத்தில் போட்டு அடுப்பேற்றி பாகு ஆகும் சமயத்தில் தேன்படி அரை, மூங்கிலுப்பு, சிலாஜது, சன்னலவங்கப்பட்டை, கர்காடகசிருங்கி, வாய்விளங்கம், திப்பிலி, சுக்கு, ஜீரகம், வகைக்குத்தோலா நான்கு, கடுக்காய்த்தோல், தான்றித்தோல், நெல்லிமுள்ளி, கொத்தமல்லிவிரை, பச்சிலை, மிளகு, சிருநாகப்பூ, வகைக்குதோலா இரண்டு, இவைகளை இடித்து வஸ்திரகாயம்செய்து மேற்படி பாகில் தூவி கிளறி நெய் ஜாடியில் பத்திரப்படுத்திக்கொள்ளவும். சுண்டைக்காயளவு முதல் இரண்டு சுண்டைக்காயளவுவரை வயதிற்குதக்கபடி தினம் மூன்றுவேளைசாப்பிடலாம்.



குறிப்பு :— மூங்கிலுப்பு முதல் எட்டு சாமான்களும் கடை சரக்கு அதில் சிலாஜது வடதேசத்திலிருந்து வரவழைக்கவேண்டும். அது நீங்கலாக மற்ற சாமான்களை வெய்யிலில் நன்றாக காயவைத்து இடித்து வஸ்திரகாயம்செய்து வைத்துக்கொள்ளவும். சிலாஜது பிசின்மாதிரியிருக்கும் ஆகலால் அதை தனியாக பாகுடன் சேர்த்துவிடவேண்டும். தண்ணீர் விட்டான் கிழங்கு பச்சையாகவே கிடைக்கும். சீந்தில்கொடியும் பச்சையாகஇருக்கவேண்டும். தவிர சீந்தில்கொடி பெருந்தண்டாக சம்பாதித்துக்கொள்ளவேண்டும். ஆடாதோடைவேர் பச்சையாக எடுத்துக்கொள்ளவேண்டும். வேர்கிடைப்பது துர்லபமாக விருந்தால் நீராதபசுஷத்தில் இலைகளை பதிலாக உபயோகிக்கலாம். இவைகளெல்லாம் பச்சையாகவே இருக்கவேண்டும். காய்ந்தால் குணம்கிடையாது. கொட்டைக்கரந்தை எவ்விடத்திலும் கிடைக்கக்கூடியதே. இது உலர்ந்திருக்கவேண்டும். பச்சையாக இதைப் போட்டால் இரட்டிப்பளவு போடவேண்டும். குருந்தொட்டியும் உலர்ந்ததே. நிலப்பனைக் கிழங்கு கடையில் கிடைக்கும். கருங்காலி மரத்தின் நடுபாகத்தை எடுத்து தச்சன் இழைப்புளியால் இழைத்து அந்த பொடிகளை எடுத்துக்கொள்ளவேண்டும். மரத்தின் நடுபாகத்திற்கு சில இடங்களில் சேகு என்றும் சில இடங்களில் வைரம் என்றும் அழைப்பார்கள். இது சாத்தியப்படாவிட்டால் பட்டைகளை நீக்கி மரத்தை எடுத்து முன்போல இழைப்புளியால் இழைத்துக்கொள்ளவும் சிருதேக்கு, கோஷ்டம், இரண்டும் கடைச்சரக்கு. இந்த 12 சரக்குகளையும் உரலில் போட்டு நன்றாக நொறுக்கி கிஷாயம் போடவேண்டும். லேகியம் செய்வதற்கு வாயகந்த தாம்பிரபாத்திரம் வேண்டும். இந்தபாத்திரம் கிடைக்காவிட்டால் நீராதபசுஷமாக இரும்புசட்டியை உபயோகிக்கவும். கிஷாயத்தை வடிகட்டிவிட்டு அந்த கிஷாயத்துடன் அயசிந்தூரத்தை சேர்க்கவும். அயசிந்தூரம் செய்யும் விதம். தேன் இரும்பு என்றும், மருக்கு இரும்பு என்றும், தண்டவாள இரும்பு என்றும் மூவகை இரும்பு தற்காலம் கிடைக்கின்றது. இதில் தேன் இரும்பு எடுத்துக்கொள்ளவேண்டும். எவ்வளவு வளைத்தாலும் வளையுமேயொழிய ஒடியாது. இதுதான் அதற்கு லக்ஷணம். கடையில் கம்பியாகத்தான் இந்த இரும்பு கிடைக்கும். அதை நான்கு விரல் நீளமுள்ள தகடுகளாகத்தட்டவேண்டும். கூடியவரை லேசாகதட்டவேண்டும். பிறகு அதை சுத்திசெய்யவேண்டும். சுத்தி செய்யும் விதமாவது—தகடுகளை பழுக்கக்காய்ச்சிகொள்ளு கிஷாயத்தில் ஏழுதடவையும், பிறகு கடுக்காய். தான்றிக்காய், நெல்லிவத்தல், இவைகளை சேர்த்து இடித்து கிஷாயம் செய்து அதில் ஏழுதடவையும், பிறகு பசும்பாலில் ஏழுதடவையும்தோய்க்கவேண்டும். ஒவ்

வொருதடவையும் நெருப்பில் நன்றாக பழுக்கக்காய்ச்சி காய்ச்சி தோய்க்கவேண்டும். இன்னும் விசேஷசுத்திகள் இருக்கின்றன. அவைகள் ஔஷதசாரத்தில் சொல்லப்படும். இந்த இடத்தில் இந்த சுத்திபோதுமானது. ஒவ்வொருகிஷாயத்திலும் தோய்க்கும்பொழுது இரும்புசன்னங்கள் அதில் உதிர்ந்திருக்கும். ஆகையால் தோய்ந்தபிறகு கிஷாயத்தை தெளிவாக இறுத்துவிட்டு அடியில் இருக்கும் சன்னங்களை ஒரு பீங்கானில்போட்டு வெய்யிலில் காயவைத்துக் கொள்ளவும். பிறகு தகடுகளை ஒன்றுசேர்த்து பிடிச்சுராவியில் சிக்கவைத்து அரத்தைக் கொண்டு தூள்செய்யவும். அந்த தூளில் முன் சன்னங்களையும் சேர்த்துக்கொள்ளவும். கல்வத்திலிட்டு அதற்கு சமனிடை சுத்திசெய்த மனோசிலையைச்சேர்த்து கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவத்தல் இவைகளை ஒன்றுசேர்த்து இடித்து கிஷாயம் போட்டு அந்த கிஷாயத்தை விட்டரைத்து பில்லைத்தட்டி காயவைத்து ஓட்டிலிட்டு ஓடுமூடிவாய்க்கு சீலைமண்செய்து கஜபுடமிடவும். ஆறியபிறகு எடுத்து முன்போலமனோசிலைசேர்த்து மேற்படி கிஷாயத்தால் அரைத்து பில்லைதட்டி வெய்யிலில் காயவைத்து முன்போலவே கஜபுடம் போடவும். இவ்விதம் ஏழுதடவை செய்து எடுத்துக்கொள்ளவும். இந்தலேகியத்தில் சேரவேண்டிய அயசிந்தூரத்தின் கிரமம் இது. ஆகையால் அயசிந்தூரத்தை வேறுமுறையால் சிந்தூரம் செய்திருந்தால் அந்த சிந்தூரத்தை இந்த லேகியத்தில் சேர்த்தால் குணம் குறைந்துவிடுகின்றது. ஆகையால் இவ்விதமே தயாரித்துக்கொள்ளவேண்டும். கிஷாயத்தில் இந்த சிந்தூரத்தை கணக்குப்படி சேர்த்து கல்கண்டையும் கணக்குப்படி போடவும். நெய்யையும் சிலாஜதுவையும் சேர்த்துவிடவும். இவ்விதம் ஒன்று சேர்த்து அடுப்பில்வைத்து சிறுதீயிட்டு காய்ச்சவேண்டும். பாகுபதம் தெரிந்து தேனையும் மற்ற வஸ்திரகாயம் செய்த பொடிகளையும் சேர்க்கவேண்டும். அநுபவமில்லாதவருக்கு இந்த பாகுபதம் கண்டுபிடிப்பது கஷ்டமாகவிருக்கும். ஏனெனில் சர்க்கரையை தனியாகவைத்து பாகுபதம்எடுப்பது கடினமல்ல. இதில் அவ்விதமின்றி சிந்தூரத்தையும் சேர்த்துவிடுவதால் பாகுபதம் தெரிவது கடினமாகவிருக்கும். கிஷாயத்தில் சிந்தூரத்தைக் கலந்து காய்ச்சுவதால் சிந்தூரம் முழுவதும் நன்றாக உருத்தெரியாமல் கிஷாயத்தில் கரைந்துவிடுவதால் முழுவதும் ரக்தத்தில் சேருகின்றது. அவ்விதம் கரைந்துபோகாவிட்டால் அதிக அம்சம் மலத்துடன்போய்விடும். இந்தகுணத்தை உத்தேசித்து கல்கண்டுடனேயே சிந்தூரத்தையும் கிஷாயத்தில் சேர்த்துபோடும்படி நூல்கள் கூறுகின்றன. பாகுபதத்தை அநுபவத்தில்தான் அறிந்துகொள்ளவேண்டும். தீராதபக்ஷத்தில் நெய்யையும் சேர்த்துவிடுவதைமாத்திரம் நிறுத்திக்கொண்டு சிந்



தூரம் கல்கண்டு இவைகளை மாத்திரம் போட்டு பாகுபதம் வந்தபிறகு நெய்யைச்சேர்க்கவும். பிறகு தேனைவிட்டு ஒரு கிளறுகிளறி பொடிகளைத்தூவி பதத்தில் எடுத்துவிடவும். பதம் என்பது லேகியபதமே. இதற்கு அநுபானம் பால். அது பசும்பாலாக இருக்கவேண்டும். பசும்பால் என்று நூல்களில் கூறப்பட்டாலும் காசி முதலிய இடங்களில் பெரியோர் நுரை பாலாக உபயோகிக்கின்றனர். அதாவது காலையிலும் சாயங்காலத்திலும் பசுகறந்தவுடன் அந்த சுடுகையிருக்கும் பொழுதே அரைக்கால்படி பால் அநுபானமாக குடிக்கவேண்டும். தீராத பக்ஷங்களில் காய்ச்சின பசும்பாலையும் உபயோகிப்பதுண்டு. "தாரோஷ்ணம் அமிருதோபமம்" கரந்தவுடன் சுடுகையுடன்கூடிய நுரைபால் அமிருதத்திற்கு ஒப்பாகும்என்று சொல்லப்பட்டிருக்கின்றது. வெள்ளாட்டுப்பால் சிலாக்கியமானபோதிலும் இம்மருந்துக்கு பசும்பாலையே உபயோகிக்கவேண்டும். இம்மருந்தை உட்கொண்டபிறகு தனி பசும்பாலையே பத்திய உணவாகக் கொள்ளவேண்டும். வேறு ஆகாரம் கூடாது. இம்மருந்தை உபயோகித்தாலும்கூட மத்தியில் முன்சொல்லிய ஆடாதோடை சத்தையும் சாப்பிட்டுவருவது அவசியம். இப்படி சேர்த்து சாப்பிட்டதில் குணம் அதிகமாகக் காணப்படுகின்றது. ஆகையால் இதுபோன்ற வேறு மருந்துகளை உட்கொண்டாலும்கூட ஆடாதோடை சத்தையும் சேர்த்துக்கொண்டு வரவேண்டும். கைகண்டமுறை.

காசம் — இருமல் — Cough. இவ்வியாதி பலவிதமாகவிருக்கின்றது. எல்லாவற்றையும் பொதுவில் காசமென்று அழைத்தபோதிலும் அதின் உள் பேதங்கள் பலவிருக்கின்றன. இந்த இருமல் தொண்டை, சுவாசநாடிகள், சுவாசப்பை, முதலிய சுவாச உறுப்புகளில் ஏற்படும் தோஷங்களாலும் உண்டாகின்றது. அதுமாத்திரமின்றி இரைப்பை, ஹிருதயம், மூளை முதலிய இதர உறுப்புகளின் தோஷத்தாலும் இருமல் காணுகின்றது. சுவாச உறுப்புகளில் ஏற்படும் கோளாறுகளால் காணும் இருமல் பிரதான இருமல் என்றும் மற்ற உறுப்புகளில் காணும் கோளாறுகளால் உண்டாகும் இருமல் அங்க இருமலென்றும் கொள்ளவேண்டும். அங்க இருமல் வியாதியில் இருமலுக்காக தனி சிகித்சை வேண்டியதில்லை. சுவாசப்பையிலிருந்து வரும் ரக்தப் பெருக்குக்கு Haemoptysis என்று பெயர். இவ்வியாதியில் சுவாசப்பையிலிருந்து ரக்தம் வெளியில் வரும்பொழுது இருமல் கண்டே உண்டாகும். அதாவது இருமி இருமி ரக்தம் கக்கும். சுவாசப்பையிலிருந்து ரக்தம் வெளியேறுவதற்காக தொண்டையில் உண்டாகும் ஓர் அதிர்ச்சியால் இந்த இருமல் காண்கின்றது.

இவ்வியாதியில் இருமலுக்கு மருந்துகொடுக்கவேண்டியதில்லை. ஈக்கப்பெருக்கு நின்றால் இருமல் தானாக தணிந்துவிடும். ஆகையால் சுவாச உறுப்புகளின் தோஷத்தால் ஏற்படும்இருமலைத்தான் பிரதான வியாதியாகக்கொள்ளவேண்டும்.

இரைப்பையிலும் சிறுகுடல் பெருங்குடல் இவைகளிலும் உள்ள வாயு முதலில் பிரகோபத்தையடைகின்றது. ஆகவே அது அநுலோமமாக வெளிபோகாமல் மேல் நோக்குகின்றது. அது மார்பிலும் அவ்விடமுள்ள சுவாச உறுப்புகளிலும் நெஞ்சிலும் தாக்குகின்றது. சிரசுக்குப்போகும் நாடிகளிலும் வியாபிக்கின்றது. மார்பிலும் அன்னைகளிலும் வேதனையுடனும், கண்விழி தெறித்துப்போவதுபோலவும் உடைந்த வெங்கலப்பாத்திரத்தின் ஓசைபோன்ற சப்தத்துடனும் இருமல் காண்கின்றது. பலவித காரணங்களால் இருமல் உண்டானபோதிலும் முன்சொல்லிய நிலைமை ஏற்பட்டே இருமல் காணுகின்றது. இந்த இருமல் ஐந்துவகைகளாகப் பிரிக்கலாம். உண்மையில் பலவகைகளாகப் பிரிக்கக்கூடுமாகிலும் அவையனைத்தும் இந்த ஐந்து வகையில் அடங்கிவிடுகின்றன. வாதகாசம், பித்தகாசம், கபகாசம், க்ஷதகாசம், க்ஷயகாசம், என ஐந்துவிதங்கள்.

வாத காசம்:— எந்த காசத்திலும் வாயு பிரகோபத்தை யடைந்தே வியாதி யுண்டுபண்ணுகின்றது. ஆனால் தனியாக வாயுமாத்திரம் அவ்வியாதியை யுண்டுபண்ணுவதில்லை. கபமும் சேர்ந்தே வியாதியுண்டாகின்றது. கபம் மிக அல்பமாக விருப்பதால் அதைச் சேர்க்காமல் வாயுவாலேயே உண்டாவதாகசொல்லப்படுகின்றது. அதாவது வாயு அதிகமாக விருந்தால் வாதகாசம் எனப்பெயர். வாயுவால் தாக்கப்படும் சுவாச உறுப்புகளின் பேதத்தைக்கொண்டு இவ்வியாதிக்கு பலபெயர் வழங்கப்படுகின்றது. வாயு அதிகமாக்கூடிய ஆகாரங்களை உட்கொள்ளுவதால் வாயு பிரகோபத்தை யடைந்து முன்சொல்லியதுபோல பரவி சுவாசப்பைகள், நெஞ்சு, வாய் இவைகளில் வரட்சியை யுண்டுபண்ணுவதுடன் தலைவலி, மார்புவலி, ஸ்வரம் கம்மிப்போதல் ஆகியவைகளும் காணும். கபம் விழாது. இருமல் அதிககாலம் இருக்கும். சப்தமும் அதிகம் உண்டாகும், மயிர் கூச்சல் அதிகரிக்கும் மிகவும் கஷ்டப்பட்டு கடைசியாக அல்ப கபம் விழுந்து தணியும். இதற்கு ஆங்கிலத்தில் விசேஷித்துப் பெயர் கிடையாது. அவர்கள் Bronchial affection என்று பொதுவில் சொல்லுகிறார்கள். Dry cough என்றும் வழங்கப்படுகின்றது.

2/10/55
சென்னை-600 ...

## Talismans and Charms.

**For those People to Avoid all Sorts of Misfortunes and enter the Gates of Successful Life.**

| | Rs. | As. |
|---|---|---|
| For Honour, Riches, Learning and Greatness ... | 7 | 8 |
| For Health, Physical Strength, etc. ... | 7 | 8 |
| For Power of Eloquence, Speeches, etc. ... | 7 | 8 |
| For Success in any Undertaking or Litigation, etc. | 10 | 0 |
| For Success in Sport, Racing, Cards, Games of Chance, etc. ... ... | 7 | 8 |
| For Success in Spiritual and Religious Life ... | 10 | 0 |
| For Success in Trade and Business ... | 10 | 0 |
| For Men's Love to Women ... | 7 | 8 |
| For Women's Love to Men ... | 10 | 0 |
| For Love of Opposite Six, Attractive Power ... | 7 | 8 |
| For Agricultural Prosperity, Farming, Good Crops etc. | 7 | 8 |
| Forming, Good Crops, etc. ... | 7 | 8 |
| For Success in Mining Plumbago, etc. ... | 100 | 0 |
| For Success in Gemming. ... | 225 | 0 |
| Rabbi Solomon's Special Talisman for every success | 15 | 0 |
| Specially valued and worn by every successful Hebrew, 2nd quality ... | 21 | 0 |
| 1st quality ... | 30 | 0 |

Note:— A money Order or G. C. Notes will bring the Talisman to your door. One Extensive Life Reading Rs. 15 two Rs. 25, three Rs. 30 or more at a time at Rs. 10 per reading. Remit with birth date. Always the full amount should be remitted in advance. No V. P. P.

Apply to:- **D. A. RAM DUTH, Astrologer,**
No. 30 & 55 (V. C.) Cheku Street, Colombo. (Ceylon).

ஸ்ரீ பார்த்தஸகன் அவர்கள் இயற்றிய
"சத்திய விரதன்"
என்னும் அருமையான தமிழ் நாவல்.

பல நூறு பிரதிகள் விளம்பரமின்றியே தீர்ந்து விட்டன, ...மிழ் நாகரீகத்தையே உரைப்பது. கற்பின் திண்மையையும், ...த்தியத்தின் மேன்மையையும் செவ்வனே எடுத்துக்கூறுவது ...ண்டிதர்களாலும் பத்திரிகைகளாலும் புகழப்படுவது.

அபிப்பிராயம்.

நவசக்தி எழுதுகிறது:—இந்நூல் நயம்பட எழுதப்பட்டிருக்கிறது. கதையை விஞ்சவளர்க்காமல் சுருக்கமாகவும் அனைவருக்கும் விளங்கும்படியாயும் எழுதப்பட்டிருப்பது போற்றத்தக்கது.

விலை அணா எட்டு. உடனே எழுதுங்கள். சொல்பபிரதிகளே
...00-க்கு 40 கமிஷன். ஸ்ரீநிவாஸராகவாசாரி.
வெங்கரை P. O., (வய) புகளூர் S. I. R.

# அஹிம்ஸா பரமோ தர்ம.

ஓர் அரியநூல் :— இதுவரையில் வெளிவராதது. எல்லாரும் வாசித்துணரவேண்டியதொன்று. விலை அணா 2.

2 அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்கட்குச் சாதாரணத் தபாலில் அனுப்புவோம். வி. பி. யிலும் பெறலாம்.

மானேஜர் "விசால ஹிருதயம்" ஆபீஸ்;
பத்மநாபபுரம், தக்கலைப் போஸ்ட்

---

# ஞான இரகசிய சிந்தாமணி.

## ஓர் அரிய வேதாந்த நூல்.

ஆயிரக்கணக்காய்ச் செல்வாகின்றது.

முந்துங்கள் ! முந்துங்கள்

### இதில் அடங்கிய விஷயங்கள்.

1. பிரஹ்ம லக்ஷணம்
2. ஆன்ம லக்ஷணம்
3. ஜீவாத்மா, பரமாத்மாக்களின் சம்பந்தம்
4. ஆத்மா ஒன்றே
5. மனமே மாயை
6. பூர்வ வாசனை
7. மாயை இல்லாதது
8. மகளிரே சகல துன்பத்திற்கும் காரணம்
9. சாஸ்திர ஆராய்ச்சி அவசியம்
10. ஆன்ம விசாரணை
11. சத் சங்கம்
12. போகம் விரும்பாமை
13. உலகம் மித்தையெனல்
14. ஆசை
15. அகங்காரம்
16. பக்தர்
17. ஆயுர் தூஷணம்
18. நிட்காம கர்மம்
19. வைராக்கியம்
20. தூல, சூக்கும, காரண சரீரங்கள்
21. விக்கிரக ஆராதனை
22. பரமாத்மா, ஜீவன், ஜகத். இவற்றின் உண்மை
23. சக்ரம்
24. தாபத்திரயம்
25. பஞ்சகோச விளக்கம்
26. சச்சிதானந்த இலக்கணம்
27. ஆவரண விட்சேப சக்திகள்
28. அந்தக்கரண விருத்தி
29. ஜீவன் முக்தர்களின் [illegible]கம்

இந்நூலின் விலை அணா 8 தான்.

வி. பி. யில் வரவழைப்பது வீண்செலவாகையால் 9 ஸ்டாம்பு அனுப்பினால் போதுமானது.

வி. பி. யிலும் அனுப்புவோம்.

விலாசம்,

மானேஜர்,
"விசால ஹிருதயம்" ஆபீஸ்
பத்மநாபபுரம், தக்கலை P. O.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.